## அதிகாரம் 9

# புதிய உடன்படிக்கையின் மேன்மை

### ஆசரிப்பு கூடாரத்திலிருந்து சில படிப்பினைகள் (9:1-10)

நாம் சுவிசேஷத்தைப் புரிந்து கொள்கையில், கிறிஸ்துவிடம் நம்மைக் கொண்டு வருவதில் நமக்கு உதவின நியாயப்பிரமாணத்தைக் குறித்து நாம் மெச்சிக்கொள்கிறோம் (கலா. 3:24). எபிரெய நிருபத்தின் ஆசிரியர் தன்னுடைய வாசகர்களை வனாந்திரத்திலிருந்த ஆசாரிப்புக் கூடார காலத்தின் நாட்களுக்குப் பின்னாகப் பயணிக்கச் செய்கிறார். தேவன் மோசேயிடம் "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத். 25:8) என்று கூறியிருந்தார். இந்த வசனமானது தேவனால் முழுவதுமாக வடிவமைக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்ட உண்மையான அமைப்பின் மீது கவனம் செலுத்துகிறது. பொதுவாகவே இது முதலாம் நூற்றாண்டில் இருந்த ஏரோதுவின் தேவாலயத்தை குறித்து சொல்லப்பட்டதாக இருக்க சாத்தியமில்லை. உண்மையில், ஏதோமியன் ஒருவன் இந்தத் தேவாலயத்தைக் கட்டினதைக் குறித்துச் சில யூதர்கள் இந்தக் காற்பங்கு தேசாதிபதியின் மேல் கோபங்கொண்டிருந்தனர். எப்படியாயினும் இயேசுவின் சீஷர்கள் இந்த ஆலயத்தைக் குறித்து மேன்மையாக எண்ணினார்கள் (மாற்கு 13:1). பழைய உடன்படிக்கைக்கு மாற்றாகப் புதிய உடன்படிக்கை கொடுக்கப்பட்டிருப்பதை நாம் அறிந்திருந்தாலும், கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் அதில் மகிமையைக் காண்கின்றனர்.

தேவாலயமும் அதன் முந்திய நிலையும் பரலோகத்திலிருக்கிற பரிசுத்த ஸ்தலத்தின் மாதிரியாக மட்டுமே இருக்கின்றன. தேவாலய சடங்குகள் உண்மையான ஆராதனையின் மாதிரிகளாக மட்டுமே இருக்கிறது. யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட இந்த நிருபம், அவர்கள் பழைய நியாயப்பிரமாணத்தின் பிரமாணங்களைக் கண்டிப்பாகக் கைவிட்டு, ஆவியில் பரலோகத்துத் தேவாலயத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று போதித்தது. உண்மையாகவே, ஆவியில்

ஆராதிக்கும்போது பழைய உடன்படிக்கையில் அணுகவே இயலாத தேவனுடைய சிங்காசனத்திற்கு அவர்கள் நேரடியாகச் செல்ல முடியும் (4:15, 16).

இந்தச் சத்தியமானது, யூத விசுவாசிகள் அனைவரையும் இந்த புதிய உடன்படிக்கையின் மேன்மையான நன்மைகளை நம்ப வைத்திருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டு முத்திரைகள் பொன்னினால் மூடப்பட்டிருந்தது - ஆனால் இதன் ஆசிரியர் ஆவிக்குரிய "பொன்னை" நித்திய மதிப்புடன் வெளிப்படுத்தினார். ஆசாரிப்பு கூடாரத்தின் நோக்கமானது அதன் தங்கம் பூசப்பட்ட மரச்சாமான்கள் மற்றும் பாத்திரங்களில் முக்கியத்துவத்தை விட மேன்மையாகப் பார்க்கப்பட்டது. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு, தேவன் சபையைத் தாம் வசிக்கும் ஒரே இடமாக ஏன் கொடுத்தார் எப்படிக் கொடுத்தார் (காண்க எபே. 2:20, 21) என்று கற்றுக் கொள்வது அவரைத் தைரியமாக அணுகுதலுக்குக் காரணமாக இருக்க வேண்டும். பின்னர், அதன் ஒட்டு மொத்த செயல்பாடுகளின் திட்டத்தைப் புரிந்து கொள்ள வரும்போது, நாம் உண்மையிலேயே தேவனிடம் கிட்டிச் சேர்ந்து வளருவோம்.

இயேசு நம்முடைய மேன்மையான பலி என்பதே 9:1-10:18 வரையுள்ள வசனங்களின் மையக்கருத்தாக இருக்கிறது. எபிரெயரின் திறவுகோல் வார்த்தை கிரேக்க வசனங்களில் மீண்டும் மீண்டும் காணப்படுகிறது:

"காணிக்கை" (προσφέρω, *பிரோஸ்ஃபிரோ*): 8:3, 4; 9:7, 9, 14, 25, 28; 10:1, 2, 8, 11, 12.

"காணிக்கை" (προσφορά, *பிரோஸ்ஃபிரா*): 10:5, 8, 10, 14, 18.

"பலி" (θυσία, *துசியா*): 8:3; 9:9, 23, 26; 10:1, 5, 8, 11, 12.

"உடன்படிக்கை" (διαθήκη, *டயாதேகே*): 8:6, 8, 9, 10; 9:4, 15, 16, 17, 20; 10:16.

"இரத்தம்" (αἷμα, *ஹய்மா*): 9:7, 12, 13, 14, 18, 19, 20, 21, 22, 25; 10:4).

"பாவம்" (ἁμαρτία, *ஹமர்டியா*): 8:12; 9:26, 28; 10:2, 3, 4, 6, 11, 12, 17, 18.[1]

### பரிசுத்த ஸ்தலமும் அதன் மரச்சாமான்களும் (9:1, 2)

**[1]அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது. [2]எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும்.**

**வசனம் 1.** இதன் ஆசிரியர் 8:6 ல் "முக்கியமான ஊழியத்தை"

குறிப்பிடுகிறார், ஆனால் இங்கு அதன் தொடர்பாக மிகவும் விளக்கமாகக் கூறுகிறார். முதலாம் உடன்படிக்கையானது **தெய்வீக ஆராதனையோடு** சம்பந்தப்பட்டது. **உடையதாயிருந்தது**: என்ற வார்த்தையைக் கவனிக்கவும்: அந்த முறைமைகள் ஏற்கனவே மத்தேயு 5:17, 18 ல் முன்னுரைக்கப்பட்டபடி இயேசுவின் சிலுவையால் எடுத்துப்போடப்பட்டது (எபே. 2:14-16 மற்றும் கொலோ. 2:14-17 ஆகிய வசனங்களைக் காண்க). மேலும், ஆசரிப்பு கூடாரமானது கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருக்கவில்லை. ஆனால் நாதாப், அபியு (லேவி. 10:1-3), மற்றும் உசியா (2 சாமு. 6:6, 7) ஆகியோரின் மரணத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட படி, நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆராதனை முறைமைகளை மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. அனைத்து காரியங்களும் "மாதிரியின்படியே" கட்டப்பட மற்றும் செய்யப்பட வேண்டியிருந்தது (எபி. 8:5). குறிப்பிட்ட கட்டளைகளை யாத்திராகமம் 25-40-ல் வாசிக்கலாம். இயல்பாகவே எபிரெய நிருபத்தின் ஆசிரியர் உண்மையான மாதிரியை குறிப்பிடுகிறார். செருபாபேலின் தலைமையின் கீழும், விசேஷமாக ஏரோதினால் கட்டப்பட்ட பிற்காலத் தேவாலயங்களைத் தேவனுடைய மாதிரியின்படியானதல்ல என்று சில யூதர்கள் கருதினார்கள். ஆசாரிப்பு கூடாரத்திற்கான மெய்யான அமைப்பை எந்த யூதரும் ஆட்சேபிக்க முடியாது.

அவைகள் **பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தைக்** குறிப்பிடுவதற்காக சடங்குகள் இயற்கை தன்மையுடையதாக இருந்தன. புதிய ஏற்பாட்டில் "உலகச் சிநேகம்" (யாக். 4:4) என்று கூறப்பட்டிருப்பதுபோல இங்கு கூறப்பட்டுள்ள "உலகத்திற்குரிய" "பூமிக்குரிய" என்ற சிந்தையானது தேவனுடைய சித்தத்திற்கு எதிரானது என்று பொருளில்லை. மாறாக இந்தச் சூழலில் "பூமிக்குரிய" என்பது "பரலோகத்திற்குரிய" என்பதிற்கு முரண்பட்டு நின்றது (8:5). பூமிக்குரிய மாதிரிகள் பரலோகத்தை குறிக்கிறது மற்றும் சபையானது பரலோகத்தின் நிழலாகவும் நிறைவேறுதலாகவும் இருக்கிறது. இங்கே தேவாலயம் விவாதிக்கப்படாமல், ஆசரிப்பு கூடாரமே விவாதிக்கப்படுகிறது, ஏனெனில் இதுவே அசலாக இருக்கிறது, இதன் மாதிரியின்படி தான் தேவாலயம் கட்டப்பட்டது.

"பரிசுத்த ஸ்தலம்" என்பது "பரிசுத்த இடத்தை" பொருள்படுத்தி, முழு ஆசாரிப்பு கூடாரத்தையும் அதன் இரண்டு அறைகளையும் சுட்டுகிறது. ஒரு சபை கட்டிடமானது "பரிசுத்த ஸ்தலமல்ல" ஏனெனில் இதுபோன்ற மாளிகையானது அதன் நோக்கத்திற்கும் கொடுக்கப்பட்ட காலத்திற்கும் பயன்பட்டதுபோல இன்னமும் பரித்தமாக இருக்கவில்லை. கைகளால் கட்டப்பட்ட கட்டிடமல்ல, தேவனுடைய மக்களுடைய கூடுகையே "பரிசுத்த" சபையாக இருக்கிறது.

**வசனம் 2**. இந்த வசனமானது **ஆசாரிப்பு கூடாரத்தின்**

இரு அறைகளிலிருந்த மெருகூட்டப்பட்ட மரச்சாமான்களின் குறிப்புகளோடு தொடங்குகிறது. வெளிப்புறமானது முதலாம் அறை அல்லது **பரிசுத்த ஸ்தலத்தைச்** சுட்டுகிறது. அதனுள் திடமான தங்கத்தால் செய்யப்பட்ட ஆறு கிளைகளும் ஒரு நேர் தண்டுமுள்ள பொற் குத்துவிளக்கு இருந்தது (யாத். 25:31-40; 37:17-24).

ஆசரிப்புக் கூடாரத்திலிருந்த பொற்குத்து விளக்கு ஒருவேளை உலகத்தில் சுவிசேஷ ஒளியை பிரகாசிப்பிக்கிற சபையை முன்கணித்திருக்கக் கூடும். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். அதே போன்று ஒவ்வொரு கிறிஸ்தவரும் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும் (மத். 5:14-16). சகரியா 4:1-6 ல் இந்தத் தீர்க்கதரிசி ஒரு விளக்குதண்டின் தரிசனத்தைக் கண்டு "இது கர்த்தருடைய வார்த்தையென்று" ஒரு தூதனால் சொல்லக் கேட்டார். அநேகமாக விளக்கிலிருந்த எண்ணெயானது சபையில் வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடும்.[2]

குறிப்பிடப்பட்டிருக்கிற அடுத்த பொருளானது **மேசையும் சமூகத்தப்பமுமாகும்**. ஒவ்வொரு இஸ்ரவேல் கோத்திரத்திற்கும் ஒவ்வொன்றெனப் பன்னிரெண்டு அப்பங்கள் மேசையின் மீது இருந்தது (எப்பிராயீம், மற்றும் மனாசே கோத்திரங்களை எண்ணிக்கையில் சேர்த்து, ஆனால் ஆசாரிய கோத்திரமாகிய லேவியைக் கணக்கில் சேர்க்காமல்). அந்த மேசையானது "சமூகத்தப்ப மேஜை" என்று அழைக்கப்பட்டது. அது திரைச்சீலையருகே தேவனுடைய சமூகத்தின் அருகில் வைக்கப்பட்டிருந்தது. (சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் சமூகத்தப்பங்கள் என்றே குறிப்பிடுகின்றன, எபிரெய மொழியில் சமுகத்து அப்பம் என்று எழுத்துப்பூர்வமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.) அப்பங்களானது இரு வரிசைகளாக ஒவ்வொன்றின் மீதும் ஒரு கிண்ணத்தில் தூபவர்க்கம் வைக்கப்பட்டு அடுக்கப்பட்டிருந்தது (லேவி. 24:5-9). ஒரு வாரம் சென்றுவிட்டபிறகு இவைகள் ஆசாரியர்களால் ஒய்வு நாளின்போது உண்ணப்பட்டது.

### மகா பரிசுத்த ஸ்தலம் (9:3-5)

**3இரண்டாந்திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. 4அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. 5அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன; இவைகளைக்குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது**

**சமயமில்லை.**

**வசனம் 3**. **இரண்டாம் திரைச்சீலையானது** தேவனுக்கும் பாவமுள்ள மனிதனுக்குமிடையேயுள்ள தடைக்கு அடையாளமாக எண்ணப்படுகிறது. ஆக இது தேவனுடைய சித்தப்படியே அவருடைய சமூகத்திற்குச் செல்லும் வழியானது திறக்கப்பட்டிருக்கிறது என்பதை முன்னுணர்த்த கிறிஸ்துவின் மரணத்தின் போது தேவாலயத்திலிருந்த திரைச்சீலையானது கிழிக்கப்பட்டது (மத். 27:51). தம்முடைய மரணத்தின் போது, உருவகமாக இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றார், மேலும் தேவன் அதை இந்தத் தீரைச்சீலையைக் கிழிப்பின் மூலம் அங்கீகரித்தார்.[4] அது எப்படி நடந்தது என்பதைப் பொருட்படுத்தாமல், பிதாவிடம் செல்வதற்கு இயேசுவே வழி, அவரே ஒரே வழி என்பதை இந்த திரைச்சீலை கிழிப்பு குறிக்கிறது (யோவான் 14:6; காண்க எபி. 4:14-16).

**வசனம் 4.** இந்த ஆசிரியரின் கூற்றுப்படி **பொன்னால் செய்த தூபகலசமானது** இரண்டாவது திரைச்சீலையினுள் இருந்தது. ஆனால் இந்தப் பொன்தூபகலசமானது திரைச்சீலையின் முன்னிருந்தது என்று யாத்திராகமம் 30:6-8-ல் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இது முரண்பாடாக இருக்கிறது. LXX-ல் (எபிரெய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு) இது எந்தப் பலிபீடத்தைக் குறிப்பிடுகிறது என்பது தெளிவற்றதாக இருக்கிறது, ஆனால் யாத்திராகமத்தில் இந்தப் பலிபீடத்தையே இது குறிப்பிடுகிறது என்றால், அநேகமாக இந்த நிருபத்தின் ஆசிரியர் பாவநிவிர்த்தி நாளை தன்னுடைய மனதில் கொண்டு இதை குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தூபகலசத்தில் தூபமானது தொடர்ந்து போடப்பட்டிருக்க வேண்டும். திரைச்சீலை பின்னுக்கு இழுக்கப்பட்டபோது இந்தத் தூபகலசமானது மகா பரிசுத்த ஸ்தலத்திலிருக்கவேண்டும்.

**உடன்படிக்கைப் பெட்டியானது** பொன்னால் மூடப்பட்டு இருந்தது மற்றும் அதனுடைய மூடி "கிருபாசனம்" என்றழைக்கப்பட்டது. இந்த கிருபாசனம் மீது தெய்வீக பிரசன்னத்திற்கு அடையாளமான *ஷெக்கினா* மகிமை தங்கியிருந்தது.[5] ஆர்க் - பெட்டி என்ற வார்த்தையானது ***ஆர்கே*** என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது, இதன் பொருள் "பேழை" என்பதாகும். பெட்டியின் உள்ளே பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகை இருந்தது.[6] சாலொமோன் காலத்தின்போது இவைகள் மட்டுமே இதில் மீந்திருந்தது. இறுதியில் பத்துக்கட்டளைகள் அடங்கிய இந்தக் கற்பலகையே உடன்படிக்கை பெட்டி என அழைக்கப்படுகிறது. 1 இராஜாக்கள் 8:9-ன் படி இந்தப் பேழையில் வேறு ஒன்றும் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. ஒரு **பொற்கலசம்** அல்லது கலசம் அந்தப் பெட்டியில் இருந்தது, அதில் வனாந்திரத்தில் அலைந்து திரியும்போது கிடைக்கப்பெற்ற **மன்னா**

இருந்தது. அது ஒருபோதும் கெட்டுப்போகாததாக இருந்தது (யாத். 16:32-34).[7] **ஆரோனின் துளிர்த்த வாதுமை கோல்** அதிலிருந்ததாகக் காணப்படுகிறது (காண்க எண். 17:1-11). அந்த கோலானது ஆரோன் கர்த்தரால் பிரதான ஆசாரியராக இருப்பதற்குத் தெரிந்து கொள்ளப்பட்டார் என்பதற்கு அடையாளக் குறியீடாக இருந்தது.

அநேகமாக உடன்படிக்கைப்பெட்டியானது பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தின்போது காணாமல் போயிருக்கக் கூடும் (கி.மு. 586). வேத வசனங்களில் இதைக் குறித்துக் கடைசிக் குறிப்பு 1 இராஜாக்கள் 8:9-ல் (2 நாளா. 5:10 ஐ காண்க) காணப்படுகிறது. ரோம தளபதியாகிய பாம்ப்பே அவர்கள் வியப்படையும் விதமாக, கி.மு. 63 ல் அவர் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்த போது அங்கே உடன்படிக்கைப் பெட்டி இல்லை.[8] உடன்படிக்கைப் பெட்டியில்லாத நிலையில், அந்த இடமானது ஒரு கல் குறியீடு செய்யப்பட்டு அந்த கல் "அஸ்திபாரத்தின் கல்"[9] என்று அழைக்கப்பட்டது.

**வசனம் 5. கிருபாசனத்தின் மேல் மகிமையின் நிழலிட்ட கேரூபீன்கள் வைக்கப்பட்டிருந்தன** (காண்க யாத். 25:18-22; 37:7-9). இவைகள் இரு பொன்னினாலான உருவங்கள், அநேகமாகப் பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிக் காணப்படும் தேவதூதர்களுக்கு அடையாளமாக இருக்கக் கூடும். காணக்கூடாமல் இருப்பவராகிய தேவன் "கேரூபின்களின் மேல் உட்கார்ந்திருப்பவராக" 1 சாமுவேல் 4:4-ல் சித்தரிக்கப்பட்டார். தேவன் தம்முடைய சித்தத்தின் படி எந்தத் திசையில் போகிறாரோ அங்கு அவரைச் சுமந்து செல்லுகிறவைகளாகக் கேருபீன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன (எசே. 10:10-14; 1:5-14 ஐ பார்க்கவும்). சாலொமோன் தேவாலயத்தில் இரு பெரும் கேரூபீன்கள் வைக்கப்பட்டிருந்தது (1 இராஜா. 6:23-27). ஏன் இப்படிப்பட்ட உருவங்கள் விக்கிரகங்களாக கருதப்படவில்லை? இதற்கான பதிலானது அவற்றின் உயர்ந்த அடையாள இயல்பில் அடங்கியிருக்கிறது. அவைகள் வானத்தின் மேலும், பூமியின் கீழுமுள்ள எந்தச் சித்திரங்களுக்கும் ஒப்பானவைகளல்ல (யாத். 20:4; உபா. 5:8). நிஜத்தின் உருவங்கள் அதன் உண்மைகளை வெளிப்படுத்த போதுமானவைகளாக இருப்பதில்லை.

பழைய ஏற்பாட்டில் "மகிமை" யானது தேவனுடைய பிரசன்னத்தைப் பிரதிபலிக்கும் விதமாக மேகத்தோடு ஆசாரிப்புக் கூடாரத்தில் பிரவேசித்துக் கிருபாசனம் மீது நிலைக்கொண்டதோடு இணைந்திருக்கிறது.[10] "கிருபாசனம்" (ἱλαστήριον, *ஹிலஸ்டெரியொன்*) என்றால் "நிவிர்த்தி" அல்லது "பரிகாரம்" என்று பொருளாகும். பரிகாரம் என்ற வார்த்தையானது பாவத்திற்கான பிராயசித்த பலியை குறிப்பிடுகிறது, "நிவிர்த்தி" என்றால் "சமாதானப்படுத்துதல் அல்லது சாதகமாக இருத்தல்" என்று பொருளாகும். தேவன் தமது நீதியை

நிலைநாட்ட இயேசு கிறிஸ்து இரத்தத்தைச் சிந்துவதற்கு அனுமதித்து "அவருடைய இரத்தத்தை" விசுவாசிக்கிறவர்களை நீதிமானாகக் கருதுகிறார் என்று பவுல் சொல்லுகிறார் (காண்க ரோமர் 3:25). ஆக இந்த வார்த்தையில் பாவங்களை "மூடுதல்" அல்லது மன்னித்தலை சுட்டுகிறது. இது "பாவமான மனிதரை சந்தித்து அவர்களை மீட்டெடுக்கிற பரிசுத்த தேவனை உடையவர்களாக நாம் இருக்கிறோம் என்பதைச் சுட்டுகிறது."[11]

**இதைக் குறித்து** ஆசிரியர் மேலும் **பேச** விரும்பவில்லை. எப்படியானாலும் இவைகள் அனைத்தும் பூமிக்குரியவைகளாயிருந்து சீக்கிரத்தில் வெளியேற்றப்பட்டு விடக்கூடியவைகளாகும்.

**பாவ நிவிர்த்தி நாள் (9:6, 7)**

**6இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள். 7இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்.**

**வசனங்கள் 6, 7. ஆசாரியர்கள்** ஆசாரிப்புக் கூடாரத்தை ஒழுங்குப்படுத்தவும், விளக்குகளில் மறுபடியும் எண்ணெய் நிரப்பவும், காலை மற்றும் மாலை நேரங்களில் தூபம் போடவும் அதற்குள் பிரவேசிப்பார்கள் (யாத். 30:7, 8; லேவி. 24:3, 4). அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் மட்டுமே பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர். இந்த இடமானது சாதாரண யூதர்கள் பிரவேசிக்கக் கூடாத இடமாக இருந்தது. தேவதூதன் பேசும்போது சகரியா ஆசாரிய கடமைகளைச் செய்துகொண்டிருந்தார் என்று லூக்கா 1:9-20-ல் வாசிக்கிறோம். **வருடத்திற்கு ஒரு** முறை ஒரு ஆசாரியன் ஆசரிப்பு கூடாரத்தின் **இரண்டாம் அறையாகிய** மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் பாவ நிவாரண நாளின் ஊழியத்தை நிறைவேற்ற பிரவேசிப்பான்.

பாவ நிவிர்த்தி நாளின் (யோம் கிப்பூர்) செயல்கள் அனைத்தும் லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நாள் வருடாந்தரமாகத் திஸ்ரி மாதம் பத்தாம் நாளில், தோராயமாகச் செப்டம்பர் மாதத்தில் வருகிறது. **பிரதான ஆசாரியன்** வருடத்திற்கு ஒருமுறை ஒரு நாள் பிரவேசிக்கும் போது, அநேகமாக அந்த நாளின் போது மூன்று முறை அவர் செல்ல வேண்டும்: முதலாவதாக தூபவர்க்கத்தோடு கிருபாசத்தின் மேல் மேக மூட்டம் செய்வதற்கு, பின்னர் தன் சொந்த பாவத்திற்கான இளங்காளை இரத்தத்துடன், இறுதியாக **மக்கள் தங்கள் அறியாமையினால் செய்த பாவத்தை** நிவிர்த்தி செய்யும் பொருட்டு வெள்ளாட்டுக் கடா இரத்தத்தோடும்.[13]

பழைய உடன்படிக்கையின் கீழ் "முழு அறிவோடு செய்த" அல்லது வேண்டுமென்றே யூகித்துக் கலகம் செய்தவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதைக் குறித்து எந்தச் சான்றையும் நாம் காண முடியாது. *மிஸ்நஹ்* கூறுகிறது, "ஒரு மனிதன் 'நான் பாவம் செய்து மனந்திரும்புவேன் மீண்டும் பாவம் செய்து மனந்திரும்புவேன் என்று கூறினால்,' அவர் மனந்திரும்புவதற்கு அவருக்கு எந்த வாய்ப்பும் கொடுக்கப்படமாட்டாது. [ஒருவேளை அவர்] 'நான் பாவம் செய்கிறேன் பாவ நிவிர்த்தி நாள் அன்று நிவாரணம் பெறுவேன் என்ற எண்ணத்தில் பாவம் செய்தால்' பாவ நிவிர்த்தி நாள் அன்று அவன் பாவம் நிவர்த்தி ஆகாது." இது தான் எபிரெயர் 6:4-6; 10:26-29 ஆகிய வசனங்களின் சாராம்சமாக இருக்கிறது. சிலர் தீமையில் மிகவும் ஊறிப்போய் அதன் விளைவுகளை அறிந்தும் கீழான வழிகளைப் பின்பற்றுகின்றனர். இதற்கு முரண்பட்டு உண்மையாகவே "அறியாமையினால்" செய்த பாவங்களுமுண்டு, அது "அறிந்து செய்கிற" பாவங்களிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். தேவன் மட்டுமே மன்னிப்பையளிக்கிற அல்லது நித்திய அழிவை கொண்டு வருகிற அறியாமையின் அல்லது அறிந்து செய்கிற பாவங்களின் அளவை தீர்மானிக்கிறவர்.

பழைய உடன்படிக்கையின் கீழ் இடப்பட்ட பலிகள் பாவத்தை நிவிர்த்திச் செய்தது, ஆனால் அவைகள் பாவத்தை நீக்கவில்லை. கிறிஸ்துவின் சுத்திகரிப்பு மற்றும் மீட்பின் பணியானது யூத பிரதான ஆசாரியர் பாவிநிவிர்த்தி நாளின்போது செய்த பணியை விட அதிகமானதாகவும் அதை விட மேலானதாகவும் இருக்கிறது.

**உருவகங்கள் மற்றும் அடையாளங்கள் மட்டும் (9:8-10)**

**[8]அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். [9]அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம். [10]இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களுமா சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.**

**வசனம் 8.** திரைச்சீலை திறக்கப்பட்டதுடன் அல்லது நீக்கப்பட்டதுடன், தேவனுடைய சமூகத்திற்குப் பிரவேசிக்கும் வழியானது திறக்கப்பட்டது. மோசேக்கு நியாயப்பிரமணத்தையும், ஆசாரிப்பு கூடாரத்தின் சடங்குகள் அனைத்தையும் **பரிசுத்த ஆவியானவர்** தாமே தந்தார். அந்தச் சடங்குகளின் உண்மையான

அர்த்தங்கள் எபிரெயரில் காணப்படுகிறது, இந்த உண்மையான அர்த்தங்களும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது. உண்மையாகவே மற்ற புத்தகங்களை விட எபிரெய நிருபமானது பரிசத்த ஆவியினால் அருளப்பட்ட தேவ வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தை வடிவமைத்துக் கட்டுவதற்கு வழிகாட்டின அதே ஆவியானவரே பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களையும், புதியஏற்பாட்டின் ஆசிரியர்களையும் வழிகாட்டி ஏவினார் (2 பேதுரு 1:20, 21).

எபிரெயரை வாசிக்கும்போது, ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்த இரண்டாம் பெரும் அர்த்தங்களைக் கொண்டுள்ள பழைய ஏற்பாட்டு வசனங்கள், புதிய ஏற்பாட்டு ஆராதனையின் முக்கியத்துவத்தைக் கிரகித்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். பரிசுத்த பர்வதத்தில் தனக்குக் காட்டப்பட்டதை மோசே உருவகமாக நகல் எடுத்ததைப் போல செய்தார், அதுவே ஆசரிப்புக் கூடாரம் (காண்க யாத். 25:40; எபி. 9:8, 11, 23, 24).

பழைய முறைமை நிறைவேறும் வரை, மக்கள் **பரிசுத்த ஸ்தலமாகிய** பரலோகத்திற்குப் பிரவேசிக்க எவ்வாறு இரட்சிக்கப்படக் கூடும், அல்லது நீதிமான்களாக்கப்படக்கூடும் என்பது தெளிவற்றதாக இருந்தது. **தேவாலயம் இருந்த வரை** பரலோகத்திற்குச் செல்லும் வழியைக் குறித்து எவரும் கண்டுபிடிக்கவில்லை என்று மொழியாக்கத்தில் காணப்படுகிறது. “முதலாம் ஆசரிப்புக் கூடாரம் இன்னமும் இல்லாதபோது” என்ற ஒரு சிறந்த மொழியாக்கமும் பரிந்துரைக்கப்படுகிறது.[15] “வெளிப்புற ஆசாரிப்பு கூடாரமானது” “இன்னமும் இருக்கையில்” பரலோகத்திற்குச் செல்லும் வழியானது வெளிப்படுத்தப்படவில்லை என்பதை “பரிசுத்த ஸ்தலம்” (மகா பரிசுத்த ஸ்தலம்) சுட்டிகாட்டுகிறது என்று வசனம் 8 கூறுகிறது. அதாவது, பழைய முறைமையைச் சார்ந்து ஒரு நபர் தேவனுடைய சமூகத்திற்கான மெய் வழியைக் கண்டுபிடிக்க இயலாது. நிழலைப் பற்றிக் கொண்டு ஒருவர் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. எபிரெய கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து நடப்பது அவர்களுடைய இரட்சிப்புக்கு ஆபத்தை விளைவிக்கும்.

பிரதான ஆசாரியன் மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியும், என்ற நிலையானது பரலோக பிரவேசமானது தெளிவற்றதாக இருக்கிறது என்பதை குறிக்கிறது. அந்த தெளிவற்ற நிலை திரைச்சீலை கிழிந்தபோது உருவகமாக முடிவுபெற்றது. நியாயப்பிரமாணத்தின் மூலம் இரட்சிப்படைந்தவர்கள் மீட்கப்படும் நாளை எதிர்நோக்கி வாழ்ந்தனர். இது எப்படி கிறிஸ்துவின் மரணத்தால் நிறைவேறும் என்பது கிறிஸ்து வரும் வரையிலும், அப்போஸ்தலர்கள் அவருடைய பணியை வெளிப்படுத்தும் வரையிலும் இரகசியமாகவே இருந்தது.

**வசனம் 9 ன்.** மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பார்க்க இயலாமை (வசனம் 8) கிறிஸ்தவக் காலத்திற்கு (தற்போதைய "காலம்" அல்லது "யுகம்") ஒரு "உருவமாக" அல்லது **அடையாளமாக**[16] இருந்தது. மேசியாவின் காலமானது சபையில் நிறைவேறப்போகிறவைகளின் மாதிரிகள் மற்றும் நிழல்களின் தொகுப்பாகும். கிறிஸ்துவின் மரணத்தின் போது கிழிந்து போன திரைச்சீலை உண்மையான மகா பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது (காண்க மத். 27:51; மாற்கு 15:38; லூக். 23:45). கிறிஸ்து இரத்தம் சிந்தி பரலோகத்தில் பலியாக செலுத்தும் வரை மகிமைக்கான வழி முற்றிலும் வெளிப்படவில்லை என்பதை இது சுட்டுகிறது. அப்போஸ்தலர் 2 ல் அப்போஸ்தலர்கள் ஒருவர் எப்படி இரட்சிக்கப்படக் கூடும் என்பதை உருவகப் பேச்சிலில்லாமல் வெளிப்படையாகவே அறிவித்தார்கள் (அப். 2:36-38). பரலோகத்திற்குப் பிரவேசிக்க நம்மை அனுமதிக்கும்படிக்கு திரைச்சீலையானது கிழிக்கப்பட்டது. தற்போது வழியானது முற்றிலும் தெளிவானதாக இருக்கிறது.

இயேசுவின் கிழிக்கப்பட்ட சரீரம் (திரைச்சீலை) வழியைத் திறந்தது (எபி. 10:20). சபை அல்லது கிறிஸ்துவின் சரீரமானது கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் வரை காணப்படவில்லை. இரட்சிக்கப்பட்டவர்களடங்கிய அவருடைய சபையானது - முன்பு இழந்துப்போனவர்களாகவும், இயேசு இரத்தத்தால் விலைகிரயம் செய்யப்படாத வரை சபைக்குள் பிரவேசிக்க இயலாதவர்களுமாக இருந்து தற்போது மீட்படைந்த ஆத்துமாக்களின் கூட்டம் ஆகும் (அப். 20:28). தேவன் தம்முடைய மெய்யான பிரதான ஆசாரியரான மேசியாவுக்கு நம்முடைய இரட்சிப்பை பெற மகிமையின் திரைச்சீலைக்குள் பிரவேசிக்கச் சாத்தியப்படுத்தினார். "இஸ்ரவேலிலிருந்த ஆசாரிப்பு கூடாரமும், அதன் பின்னரான தேவாலயமும் திரைச்சீலை கிழிக்கப்படும் வரை, இஸ்ரவேலின் சரித்திர காலத்தின்போது படிப்பினையாக இருந்தது."[17]

நியாயப்பிரமாணத்தின் கீழ் **ஆராதிக்கிறவர்கள்** உண்மையான உணர்வில் பாவங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறோம் என்று **மனச்சாட்சியில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை**. "ஒரு மனிதன் மனச்சாட்சியில் சுத்திகரிக்கப்பட்டால் மட்டுமே எந்த ஒரு தடையுமில்லாமல் தேவனைச் சந்திக்கவும், அவருக்கேற்ற ஊழியம் மற்றும் ஆராதனையைச் செய்யவும் அணுகுவதற்கு விடுதலை பெற்றிருக்கிறான்."[18] இங்கே மனச்சாட்சி என்ற வார்த்தையானது அநேகமாக வெறும் பாவத்தைக் குறித்த "விழிப்புணர்வாக" இருக்கக் கூடும் - ஆக தாக்கத்தில் அது ஒரு "காயமடைந்த மனச்சாட்சியாக" இருக்கும். ஒரு கலக்கமுள்ள மனச்சாட்சியோடுள்ள இதன் வாசகர்கள் அநேகமாக மற்ற வேதப்பகுதிகளை விட எபிரெய நிருபத்தில் அதிகமான உதவியைக் காணக் கூடும்.[19] உண்மையில் கலக்கமுள்ள

மனச்சாட்சியுடைய ஒவ்வொரு மனிதனுக்கும் மனுஷிக்கும் இதன் ஆசிரியர் 9:14-ன் மூலம் உதவி செய்கிறார். ஒருவேளை ஒரு யூதன் யோம் கிப்பூர் நாளன்று தான் அளித்த பலிகளினால் தன்னுடைய மனச்சாட்சி சுத்தமடைந்ததாக நினைத்துக்கொள்ளக் கூடும். அநேகமாக அந்த நாளில் அவருடைய பாவங்கள் நீங்கிப்போனதாக விசுவாசத்தார்கள், ஆனால் அவர் இன்னமும் பாவத்திலிருந்தார்கள்.

**வசனம் 10.** இன்றைக்கு ஒருவர் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதினால் உண்மையாகவே சுத்த மனச்சாட்சியைப் பெற முடியும் (1 பேதுரு 3:21). இந்தச் செயலின் மூலம் நம்முடைய கடந்த காலப் பாவங்கள் இனியும் இல்லை என்று அறிந்துகொள்ள முடியும். இயேசுவே இரட்சிப்பிற்கும், தேவனைச் சென்றடைய அனுமதிக்கும் சுத்திகரிப்பிற்கும் வழியாக இருக்கிறார் (யோவான் 14:6). நியாயப்பிரமாணமானத்தினால் பாவத்திலிருந்து முழு மன்னிப்பை வழங்கவோ அல்லது பெற்றுத்தரவோ முடியாது. இது ஒரு அடையாளமான அல்லது சடங்காரச்சாரமான மன்னிப்பை மட்டுமே தந்தது. இது **சரீர சம்பந்தமான முறைமைகளை** மட்டுமே கொண்டிருந்தது, இதனுடைய பல்வேறு கழுவுதல்கள் ஆத்துமாவை சுத்திகரிக்க இயலவில்லை.

அவைகள் "அடையாளங்கள்" (வசனம் 1) அல்லது "நிழல்கள்" (கொலோ. 2:14-17) மட்டுமே. **சீர்த்திருத்த காலம்** (διόρθωσις, *டயொதொசிஸ்*) வரை இவைகள் நீடித்தன. சீர்த்திருத்தம் என்ற இந்த வார்த்தையானது "தனது அசலான நிலையிலிருந்து வீழ்ந்த ஒன்றை மீண்டும் அதன் நிலையில் நிறுத்துவது" என்று பொருள்படுகிறது. மேலும் இது விலகிப்போன மூட்டுக்களை மீண்டும் நேர்ப்படுத்துவது என்ற பொருளையும் குறிப்பிடுகிறது.[20] "அனைத்தும் சரியாக வைக்கப்படும் காலத்தை," அதாவது புதிய உடன்படிக்கையின் காலத்தை, இது மறைமுகமாகச் சுட்டுகிறது.[21] இந்த வார்த்தை "புதிய ஒழுங்கு" என்பதையும் பொருள்படுத்தும். இது இயேசுவினால் குறிப்பிட்டபடி (மத். 19:28) "மறுபிறப்பின்" காலமாக இருக்கிறது. இயேசு வேறு ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவதன் மூலம் (παλιγγενεσία, *பலிங்கெனிசியா*) ஒரு நெருங்கிய கருத்தை முன்வைத்திருக்கக் கூடும். இந்தப் *பலிங்கெனிசியா* என்ற வார்த்தை ஆவிக்குரிய மறுபிறப்பு அல்லது புத்துயிர்ப்பு எனப்படும் இது அனைத்து நபர்களுக்கும் பொருந்தும். ஆனால் "சீர்த்திருத்தம்" என்ற வார்த்தை எபிரெயர்களுக்குத் துல்லியமான பயன்பாட்டை உண்டாக்கி அநேகமாக யூதர்களின் வாழ்விற்கு அதிகமாக பொருந்தக் கூடியதாக இருக்கிறது. காரியங்கள் "சரிப்படுத்தப்பட" இது தான் சரியான காலமாக இருந்தது. அனைத்து ஆத்துமாக்களுக்கும் இராஜ்ஜியத்தினுள் பிரவேசிக்க கதவுகளை "சுவிசேஷ காலம்" திறக்கும் வரைக்கும், இது நடை பெறக் கூடாமலிருந்தது.

## கிறிஸ்துவின் மரணமும் பாவநிவர்த்தியும் (9:11-15)

கிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைச் சத்தியமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டு ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தது போல, இயேசு மெய்யான பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தார். அவர் மெய்யாகவே மகா பரிசுத்த ஸ்தலத்தில் அமர்ந்திருக்கும் பிதாவின் சமூகத்திலிருக்கிறார். புதிய பிரதான ஆசாரியர் இருக்கையில், பழைய நிழல்கள் அனைத்தும் அவசியமற்றுப்போனது.

இந்த 9:11-15 வேத பகுதிகளை "எபிரெயரின் இருதயம்" என்று அழைக்கலாம். இதனுடைய மையக் கருத்து இயேசுவின் இரத்தமாக இருக்கிறது. இதைக் குறித்து நாம் மேலும் அறிந்து கொள்ள "இயேசு தமது இரத்தத்தின் மூலம் நமக்குக் கொடுத்தது என்ன?" என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

### கிறிஸ்துவினுடைய பாவநிவிர்த்தியின் மேன்மை (9:11-14)

**[11]கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், [12]வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். [13]அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், [14]நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!**

**வசனங்கள் 11, 12.** கிறிஸ்துவின் பலியானது நமக்கு நித்திய இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இந்த வசனங்கள் ஒரு காரியத்தை மட்டுமே மையப்படுத்துகின்றன, ஆனால் அது நாம் படிக்க மற்றும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய அவசியமான புதிய எண்ணங்களையும், ஆழமான சிந்தைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**வரப்போகிற நன்மைகளுக்குரிய** என்ற வார்த்தையின் அர்த்தம் "ஒன்றாக இணைந்து கொள்" (παραγίνομαι, *பாராகிநொமய்*) என்பதாகும். பல மொழிபெயர்ப்புகளில் "வந்திருக்கிறேன்" என்று இரு கையெழுத்து பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு

மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் "ஏற்கனவே இருக்கிற நன்மைகளை" குறிப்பிடுகிறார்.[23] நன்மைகளின் பிரதான ஆசாரியனாகக் கிறிஸ்து இருக்கிறார் என்பது வெறும் எதிர்கால வாக்குத்தத்தமாக இராமல், ஏற்கனவே தெய்வீக நிபந்தனைகளினால் நிறைவேறி இருக்கிறது என்று B. F. வெஸ்ட்காட் அவர்கள் உறுதியாகக் கூறினார். மேலும் அவர் "ஒருவேளை மனிதர்கள் அந்தச் சுதந்திரத்தில் பிரவேசிக்காவிட்டாலும், அது ஏற்கனவே சம்பாதிக்கப்பட்டிருக்கிறது"[24] என்று கூறுகிறார். கிறிஸ்துவின் முதல் வருகையில் நன்மைகள் வந்திருக்கிறது அல்லது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. "வரப்போகிற நன்மைகள்" என்ற சொற்றொடரானது நன்மைகளோடு இணைந்த கிறிஸ்தவக் காலமாகிய "சீர்த்திருத்த காலத்திற்கு" (வசனம் 10) சமமாக இருக்கிறது.

**கிறிஸ்து பிரதான ஆசாரியராக வெளிப்பட்டார்** என்பது முதலாம் வருகையை விட அதிகமாகப் பொருள்படுத்தக் கூடும். அவர் "வெளிப்பட்டார்" அல்லது "வந்தார்" என்பது வெறுமனே பிறந்தார் என்பதற்கும், பிரதான ஆசாரியராகும் பெரும் நோக்கத்திற்காக உலகத்திற்கு வந்தார் என்பதற்கும் எதிராக இருப்பது போன்று இருக்கிறது. நாம் "ஒரு பிரதான ஆசாரியரை கொண்டிருக்கிறபடியால்" (8:1), ஏற்கனவே, இயல்பாகவே அவர் நமக்காகச் சேகரித்து வைத்திருக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய வழியில் நியாயப்பிரமாணம் போட்டிருந்த தடைகளை அவர் நீக்கிப்போட்டார். இந்த நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகள் பூரணமாகுதலை சாத்தியமற்றதாக்கியது. அதை அவர் நம் நடுவிலிராதபடி எடுத்துப்போட்டு அவருடைய சிலுவையில் ஆணியால் அறைந்தார் (கொலோ. 2:14).

**மேன்மையான மற்றும் முழுமையான ஆசாரிப்பு கூடாரம் என்றால் என்ன?** பழைய உடன்படிக்கையானது தன்னுடைய "பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தை" கொண்டிருந்தது (வசனம் 1), ஆனால் புதியது பரலோகத்திற்குரியது. பூமிக்குரிய ஆசாரிப்பு கூடாரமானது பரலோகத்தின் முன்மாதிரியாக மட்டுமே இருந்தது. மகா பரிசுத்த ஸ்தலம் பரலோகத்தை பிரதிபலிப்பதாகவும், ஆசாரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம் பூமியின் மீதான தேவனுடைய வாசஸ்தலத்தை பிரதிபலிப்பதாகவும் இருக்கிறது. சபையாகத் தொகுக்கப்பட்ட அவருடைய மக்களே இந்த வாசஸ்தலம் (காண்க எபே. 2:19-22; 1 பேதுரு 2:5). தம்முடைய இராஜ்ஜியம் "பூமிக்குரியது அல்ல" என்று இயேசு கூறினார் (யோவான் 18:36). அவருடைய பூமிக்குரிய தேவாலயமானது **கையால் செய்யப்படாத** ஒன்றாக இருக்கிறது.[25] கைகளால் கட்டப்பட்ட எந்தக் கட்டிடமும் உன்னதமானவருடைய வீடாக இருக்க முடியாது என்று ஸ்தேவன், பவுல் ஆகிய இருவரும் வலியுறுத்தினார்கள் (அப். 7:48; 17:24). இந்தச் சத்தியத்தைக் குறித்துச்

சாலொமோனும் விழிப்புணர்வு கொண்டிருந்தார் (1 இராஜா. 8:27). நல்ல குணாதிசயமான உணர்வுள்ள ஆவி மற்றும் மனத்தாழ்மை ஆகிய அடிப்படை நற்பண்புகளைக் கொண்டவர்களின் மத்தியில் தேவன் வாசம்பண்ணுகிறார் (ஏசாயா 57:15; சங். 51:16, 17).

பிரதான ஆசாரியன் **இரத்தத்தோடு பரிசுத்த ஸ்தலத்தில்** பிரவேசிக்க வேண்டும் அதுபோல், இயேசுவும் **தம்முடைய சொந்த இரத்தத்தினால்** (எபி. 9:12) பிரவேசித்தார் (பரலோகத்திற்கு).[26] அவர் மிருகங்களின் இரத்தத்தையோ அல்லது மற்ற மனிதரின் இரத்தத்தையோ கொடுக்கவில்லை. தம்முடைய சொந்த இரத்தத்தையே கொடுத்ததால் தான் கிறிஸ்து பிரவேசித்து **நித்திய மீட்பை பெற்றுத்தரும்** அனுமதியை பெற்றார். "மீட்பு" (λύτρωσις, *லுட்ரோசிஸ்*) என்ற வார்த்தையானது அடிமைகளையும் கைதிகளையும் விடுவிப்பதற்கு அளிக்கப்படுகிற மீட்பின் விலைக்கிரயத்தைக் குறிப்பிடுகிறது. இது விலைக்கிரயம் கொடுக்கப்பட்டுப் பெறப்படுகிற விடுதலை என்பதையும் குறிக்கிறது (1 பேதுரு 1:18-20). தேவன் இனியும் (நம்முடைய) பாவங்களை நினையாதிருக்கிறபடியால், நம்முடைய விடுதலையானது நித்திய விடுதலையாக இருக்கிறது (8:12). **வெள்ளாட்டுக்கடா, இளங்காளை ஆகியவற்றின் இரத்தம்** பாவங்களை நீக்க எப்போதும் சாத்தியமற்றது (10:4 ஐ காண்க).

**வசனம் 13.** இரண்டாவதாக, இயேசுவின் இரத்தம் சுத்த மனச்சாட்சியை அளிக்கிறது. எபிரெயரில் மீண்டுமாக வசனங்கள் 13, 14 ல் "சிறியவையிலிருந்து பெரியது" என்ற வழக்கமான விவாதத்தை நாம் காண்கிறோம். தண்ணீரோடு இணைந்த கிடாரியின் **சாம்பல்** சரீரத்தை சடங்காச்சாரமாகக் கழுவக்கூடுமென்றால் (எண். 19:1-10-ஐ பார்க்கவும்), தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் எவ்வளவு அதிகமாக உண்மையாகக் கழுவக்கூடும்? ஆவிக்குரியதை அதிகமாக எண்ணின யூத ஆராதனையாளர்கள் அவர்களுடைய சடங்காச்சாரமான சுத்திகரிப்புகள் ஆவிக்குரிய ரீதியில் அவர்களை முழுமையாக்கவில்லை என்பதை உணர்ந்திருக்க வேண்டும். பாவ நிவிர்த்தி நாளின்போது கொடுக்கப்பட்ட பலிகள் தற்காலிகமானதாகவும், புறம்பான சுத்திகரிப்பாகவும் இருந்தாலும், அவற்றினால் சில நன்மைகளும் இருந்தன. ஒரு கறைபடிந்த நபர் ஆசாரிப்பு கூடார தேவாலய ஆராதனையை விட்டு அறுப்புண்டு போகாமல், தேவனோடு உடன்படிக்கையின் தொடர்பில் தொடர்ந்து இருக்க இந்தப் பலிகளின் காரணமாக இருந்தது.

இப்படிப்பட்ட பலிகளில் மறுபடியும் மறுபடியும் செய்ய வேண்டியதாக இருந்தது. ஒரு மனிதன் தீட்டுப்பட்டுவிட்டால் ஒவ்வொரு முறையும் ஒரு மிருகத்தைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் ஆசாரியனானவன் தண்ணீரில் கலக்க சாம்பலை தயாராக வைத்திருந்தார். ஒரு தீட்டுப்பட்ட மனிதன்

சபையாரோடு ஆராதிப்பதற்கு ஏதுவாக ஒரு ஈசோப்பின் கிளையைத் தோய்த்து அந்த மனிதன் மேல் தெளிப்பார்.[27] பலியின் இரத்தம் **தெளிக்கப்பட** (ῥαντίζω, *ராண்ட்டிசோ*) வேண்டுமென்று 21-ம் வசனத்தில் மறுபடியுமாகக் கூறப்பட்டிருக்கிறது.[28] **சரீர சுத்திகரிப்பின் படி பரிசுத்தமாகுதல்** என்பது சடங்காச்சார அசுத்தத்தைச் சுத்திகரிப்பதே தவிர ஒழுக்க நெறி சார்ந்த சுத்திகரிப்புக் கிடையாது. எடுத்துக்காட்டாக, பழைய உடன்படிக்கையின் கீழ் ஒரு பிணத்தைத் தொட்ட நபர் அல்லது ஒரு மரித்த உடலோடு ஒரே கட்டிடத்திலிருந்த ஒருவர் சுத்திகரிக்கப்பட வேண்டியவராக இருக்கிறார். யூத மருத்துவமனைகளில் பழமைவாத யூதருக்கு அந்த நாளில் மரணம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது என்று குறிப்பிட வெளியே அறிவிப்பை வைப்பார்கள், ஆக யூத குருக்கள் அந்தக் கட்டடத்திற்குள் பிரவேசித்து, **தீட்டுப்படக்** கூடாதென அறிந்து கொள்வார்கள். பழைய ஏற்பாட்டின் வெறும் "சடங்காச்சாரமான சுத்திகரிப்பானது" "உங்கள் மனச்சாட்சியைச் சுத்தஞ்செய்ய இயலவில்லை" (வசனம் 14).

**வசனம் 14.** இந்த வசனத்தில் மூன்று சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாவதாக இயேசு **தம்மையே தந்தார்**. இரண்டாவதாக அவர் **குற்றமற்றவராக** இருந்தபடியால் பூரணமான பலியை ஏற்படுத்தினார். மூன்றாவதாக **நித்திய ஆவியினால்** அவர் தம்முடைய பலியை தந்தார். கிரேக்க சொற்றொடரில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய சொல் இங்கு காணப்படவில்லை. ஆக நித்திய ஆவி "யினாலே" என்பது அவசியமற்றதாகும். எப்படியாயினும் கிட்டத்தட்ட எல்லா மொழிபெயர்ப்புகளும் இதை "பரிசுத்த ஆவியானவர்" அல்லது "கிறிஸ்துவின் நித்திய ஆவியைக்" குறித்த ஒரு குறிப்பு என்று கவனத்தில் கொள்கின்றன. ஆக குறிப்பிட்டு கூறக்கூடிய சொல்லும் "ஆவியை" ஆங்கிலத்தில் பெரிய எழுத்திலும் சேர்த்துக்கொள்கின்றன. இதை வைத்து இயேசுவினுடைய கல்வாரி மரணத்தின் போது பரிசுத்த ஆவியானவர் உதவினார் என்று கூறுவது பொருந்தாத ஒன்று. ஒருவேளை அது உண்மையாக இருந்தால், சிலுவையின் மேல் கைவிடப்பட்டதாகக் கூறின அவருடைய வார்த்தைகள் சர்வ சாதாரணமானதாக இருந்திருக்கும் (மத். 27:46). நிச்சயமாகவே, கிறிஸ்து இந்த உலகத்தில் செய்தவை அனைத்தும் ஆவியானவருடைய சித்தத்திற்கு இசைந்ததாக இருந்தது என்பதே இதன் அர்த்தம் ஆகும்.

ஆவிக்குரிய மண்டலத்தில் கிறிஸ்துவினுடைய சொந்த தெய்வீக இயல்பாக இந்தச் சொற்றொடரை ஏற்றுக் கொள்ளுதலே ஒரு சிறந்த அணுகுமுறையாக இருக்கும்.[29] இயேசு மாம்சத்தில் பிறந்தது ஆவியானவரின் தாக்கத்தினால் நிகழ்ந்தது (லூக். 1:35), மேலும் தாம் "தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்தினதாக" இயேசு கூறினார் (மத். 12:28). மற்றொரு சாத்தியமான அர்த்தம் யாதெனில்,

அவருடைய பலியானது சரீரப்பிரகாரமானதாக இல்லாமல் அடிப்படையில் ஆவிக்குரியதாக இருக்கிறது.[30] இந்த வசனம் அநேகமாக ஏசாயா 42:1 “என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்” என்ற வார்த்தையை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது.[31] கிறிஸ்து தாம் என்ன செய்கிறார் என்பதைக் குறித்த முழு புரிந்து கொள்ளுதலோடு செய்தார் மற்றும் எந்த மிருகமும் ஒருபோதும் செய்யக் கூடாத பலியை செலுத்தினார் என்பதே இங்குச் சுட்டுகிற குறிப்பாக இருக்கிறது. “வேறு எந்தப் பலி பொருளும், நிச்சயமாக வேறு எந்தப் பிரதான ஆசாரியனும் இதைச் செய்திருக்க முடியாது. இது தன்னார்வத்தோடும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டபடியும் நிறைவேற்றப்பட்டது.”[32] மிருகங்கள் அவைகளுடைய சரீரங்களை பலியாக ஒப்புக்கொடுக்க சொந்தமாக ஆவியைப் பெற்றிருக்கவில்லை, ஆனால் இயேசு விருப்பப்பட்டுச் சிலுவைக்குச் சென்றார்.

அவர் “குற்றமற்றவராக இருந்தார்” இதன் பொருள் என்னவென்றால் அவர் தம்முடைய ஆத்துமாவை கறைப்படுத்திக் கொள்ளும் பாவத்தை உடையவராக இல்லை. செப்துவஜிந்த்தில் பலிக்கு பயன்படுத்தப்படும் “குற்றமற்ற” மிருகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ள அதே வார்த்தை (லேவி. 1:3, 10; காண்க 1 பேதுரு 1:19) “குற்றமற்ற” ἄμωμος (*அமொமொஸ்*) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. **மனச்சாட்சியைச் சுத்திகரித்தலானது** ஆத்துமாவை குற்றவுணர்விலிருந்து சுத்திகரிப்பதாகும். கிறிஸ்துவின் இரத்தம் இன்றளவும் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது (1 யோவான் 1:7).[33]

**இயேசுவின் இரத்தம்** என்ற சொற்றொடரானது (10:19-ல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும்) இந்த எபிரெய நிருபத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. குற்றவுணர்வு நீக்கப்பட்டபோதும், தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்த போதும், ஒருவன் இறுதியில் மரணத்தினால் தேவனைச் சந்திப்பதற்குப் பயமற்றுப் போகக்கூடும். ஏதும் அறியாதவர் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? ஒருவர் தேவனுக்கு முன்பாகக் குற்றவுணர்வு இல்லையென விசுவாசிக்கும்போது எல்லா அழிவுகளிலும் அமைதியாகவும் சமாதானமாகவும் இருப்பார்.

உடன்படிக்கைக்கு புறம்பே நிகழும் அனைத்துக் காரியங்களும் அதாவது புதிய உடன்படிக்கையின் கீழ் தேவனிடத்தில் ஏற்படும் உறவே ஆனாலும், **செத்த கிரியைகளாக** இருக்கிறது (6:1-ல் குறிப்பிட்டிருப்பதைக் காண்க). நாம் கிறிஸ்துவிற்குள் நீதிமான்களாக எண்ணப்பட்டிருப்பதை ஒப்பிடுகையில் இந்தக் கிரியைகள் மதிப்பற்றவைகளாக இருக்கின்றன. இந்த “செத்தத்தன்மைக்கு” பல காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. (1) பாவத்திலிருக்கிறவன்

தேவனுக்கு மரித்தவனாக இருக்கிறான் மற்றும் அவன் கிறிஸ்துவுக்குப் புறம்பானவன் (2) கிறிஸ்தவரல்லாதோரின் கிரியை எந்த "ஜீவனுள்ள அறுவடையையும்" விளைவிக்காமல் மரணத்தில் நிறைவடையும். (3) கிரியைகள் நியாயத்தீர்ப்பிற்கும் நித்திய மரணத்திற்கும் மட்டுமே வழி நடத்தும்.[34] "செத்த கிரியைகள்" ஜீவனைக் கொண்டுவராத பழைய உடன்படிக்கையின் கீழ் நடபித்தவைகளைக் குறிப்பிடுகிறது. "மரணம்" (νεκρός, *நெக்ரோஸ்*) மற்றும் கிரியை (ἔργον, *எர்கொன்*) என்ற இரு சாதாரண வார்த்தைகளின் பயன்பாட்டுடன் 6:1 ல் அவைகளையே குறிப்பிடப்பட்டுள்ளது.

செத்த கிரியைகள் நீக்கப்பட்டவுடன், ஒருவர் **ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம்** முடியும். இந்த சுத்திகரிப்பைப் பெறாமல் ஒருவரால் தேவனை ஆராதிக்கவோ ஊழியம் செய்யவோ முடியாது. ஊழியம் என்பதன் மூல பதம் *லேட்ரியோ* (λατρεύω) ஆகும் "இது மதச் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதை எப்பொழுதும் குறிக்கிறது." ஆராதனையும் இந்த கடமையில் உள்ளடங்கியதாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.

### தியாகப் பலியும் நித்திய சுதந்திரமும் (9:15)

**15ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.**

**வசனம் 15.** மூன்றாவதாக, இயேசு தம்முடைய இரத்தத்தினால் நமக்குப் **புதிய உடன்படிக்கையை** அளித்திருக்கிறார். இந்தப் புதிய உடன்படிக்கையில் **மத்தியஸ்தராக** இயேசு இருக்கிறாறென்று நாம் ஏற்கனவே பார்த்தோம் (8:6), இதற்கு அடிப்படையாக இருப்பது அவருடைய பிராயச்சித்த **மரணமே** என்பதை இங்கு பார்க்கிறோம். **பழைய உடன்படிக்கையின் கீழ்** மரித்தவர்களுக்கு என்ன நிகழும் என்பதை அறிய நாமும், நமக்கு முன்னிருந்த பலரும், மிகவும் ஆவலாக இருந்தனர். ஐசுவரியவான் சித்திரவதைக்குள் சென்றிருக்க (லூக். 9:28-36; 16:23-26), மோசேயும் எலியாவும் மகிமையின் இராஜ்ஜிய எல்லைக்குள் சென்றனர் என்று நாம் பார்க்கிறோம். நம்மைப் போன்றே விசுவாச வீரர்களும் விசுவாத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் நியாயந்தீர்க்கப்பட்டார்கள் (ரோமர் 4:3, ஆதி. 15:6; யாக். 2:21-23). *எப்படி* என்ற கேள்விக்கான பதில் இந்தப் பகுதியில் காணப்படுகிறது: இயேசு அவர்களுடைய பாவங்களுக்காகவும் நம்முடைய பவங்களுக்காகவும் மரித்தார் என்பதே இதற்கான பதில். நம்மைப் போன்றே அவர்களும் குற்றவுணர்விலிருந்தும், நியாயப்பிரமாணத்தை

மீறுகிறவர்களுக்கு எதிராக நியாயப்பிரமாணம் அறிவிக்கிற தண்டனையிலிருந்தும் மீட்கப்பட்டிருக்கிறார்கள். சிலுவையானது எல்லாக் காலத்திலுமுள்ள கீழ்ப்படிந்த விசுவாசிகளுக்கு மீட்பையளிக்கிறது. நாம் பரலோக இராஜ்ஜியத்தில் பழைய ஏற்பாட்டு தேவனுடைய விசுவாசிகளுடன் அமர்ந்திருப்போம் என்று இயேசு கூறினார். எடுத்துக்காட்டாக "ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு" (மத். 8:10, 11). நம்முடைய பாவங்களுக்காகவும், நம்முடைய முந்தின தலைமுறையின் பாவங்களுக்காகவும் இயேசு தம்மடைய இரத்தத்தைச் சிந்தினார் என்ற சத்தியமானது மத்தேயு 26:28-லும் 1 கொரிந்தியர் 11:25-லும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

தேவன் முதற்காலத்தில் பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளின் பாவங்களைப் பொறுத்துக்கொண்டிருந்தார் (ரோமர் 3:25, 26). எனவே அவர்களுடைய பரலோக வாசஸ்தலமானது கிறிஸ்துவின் மரணத்தினால் பாதுக்காக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தனது மரணத்தின் மூலம் தம்முடைய இரத்தத்தைத் தாமாகவே கொடுத்து இந்த உடன் படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் (மத். 26:28). மரணத்தோடு உடன்படிக்கைக்கு இருக்கும் தொடர்பானது ஆதி காலத்தோடு தொடர்புடையது. இது நமக்காக ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையாய் இருக்கிறதேயொழிய தேவனுக்கல்ல.[36] ஆபிரகாமிற்குக் கொடுத்த ஆசீர்வாதத்தை கிறிஸ்துவுக்குள் ஆபிரகாமும் பெற்றுக்கொண்டார் நாமும் பெற்றுக்கொண்டோம்.

"உடன்படிக்கை" "*டயாதிக்கெ*" (διαθήκη), அல்லது "ஏற்பாடு" என்ற வார்த்தை கண்டிப்பாக விளக்கப்பட வேண்டும். எபிரெய நிருபத்தில் இது ஒரு திறவுகோல் வார்த்தையாக இருக்கிறது. இந்த நிருபத்தின் கிரேக்க பதிப்பில் இந்த வார்த்தை பதினேழு முறை காணப்படுகிறது. தேவன் சீனாய் மலையில் கொடுத்த உடன்படிக்கையை இதன் ஆசிரியர் தன்னுடைய மனதில் கொண்டு இந்த வார்த்தையை இங்கு அவர் பயன்படுத்தியிருக்கக் கூடும் (8:8-12; யாத். 24:6-8). "இந்த வார்த்தை *டயாதிதெமி* என்ற வார்த்தையிலிருந்து வந்தது, டயா என்றால் 'இரண்டு' மற்றும் '*திதெமி*' என்றால் 'இடமமர்த்துதல்' என்று பொருளாகும். இந்த வார்த்தையின் ஒட்டுமொத்த பொருளானது 'இருவர் இடையே இடமமர்த்துவது.'"[37] செப்டுவாஜிந்த் மொழிபெயர்ப்பாளர்கள் ஆதியாகமத்தில் (6:18) தொடங்கி முழுவதிலும் *பெரித்* בְּרִית என்ற எபிரெய பதத்திற்கு "*டயாதிக்கெ*" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். பொதுவாக இந்த வார்த்தை இரு குழுவினருக்கிடையே உள்ள ஒப்பந்தத்தைப் பொருள்படுத்தும். இப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் அடிக்கடி மிருக ஜீவன்கள் பலியிடப்பட்டு இரத்தத்தால் முத்திரையிடப்பட்டன.

சாதாரணமாக, ஒரு உடன்படிக்கைக்கு "மத்தியஸ்தர்" (μεσίτης, *மெசிடெஸ்*), மற்றும் "இடை நபர்" அவசியம். இயேசு நம்முடைய

"மத்தியஸ்தராக" (1 தீமோ. 2:5) இருப்பதால் இந்த வார்த்தை அவருக்குப் பொருத்தமாக இருக்கிறது.[38] அந்தக் காரணத்திற்காகவே ஏவப்பட்ட எழுத்தாளர்கள் *டயாதிக்கெ* என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள் என்பது சாத்தியமாக இருக்கிறது. ஒரு நபரின் கடைசி "உயில் மற்றும் ஒப்பந்த உறுதி" குறித்து எபிரெயர் 9:15-17-ல் வாசிக்கிறோம். சிலர் எபிரெய நிருபம் முழுமையிலும் இந்த வார்த்தை "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கபட்டுள்ளது என்று வலியுறுத்த, மற்றவர்களோ "ஒரு புதிய உடன்படிக்கை அல்லது ஏற்பாடு" என்ற இரண்டு அர்த்தங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையின் பயன்படானது "ஒரு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின் விளைவாக அல்லாமல் ஒரு நபருடைய உயிலின் பிரகடனமாக இருக்கிறது."[39] உயிலை உருவாக்கியவரின் சட்டங்கள் சுதந்திரிக்கப்போகிறவர்களால் பின்பற்றப்பட வேண்டும். 9:16, 17 ல் "ஒப்பந்த உறுதி" என்ற அர்தத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு சட்டத்தை உருவாக்குகிறவராகவும், சட்டத்தைக் கொடுப்பவராகவும் இருந்தாலும், அவர் நம்முடைய மத்தியஸ்தராகவும் தொடருகிறார் (எபி. 7:25). இது ஒரு உடன்படிக்கை, மற்றும் ஒப்பந்த உறுதி ஆகிய இரு உணர்வுகளையும் எடுத்துரைப்பது போன்று இந்தச் சூழலில் காணப்படுகிறது. "இதன் ஆசிரியர் புதிய உடன்படிக்கையை உருவாக்குதலில் இயேசுவின் மரணத்தின் அவசியத்தைச் சித்தரிக்கும் விதமாக *டயாதிக்கெயை* 'உடன்படிக்கை' மற்றும் 'உயில்' ஆகிய இரு வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கிறார் என்று" கூறுவது மிகத் துல்லியமான கருத்தாக இருக்கும்.[40]

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் விடப்பட்ட அழைப்பை ஏற்றுக் **கொண்டவர்களே அழைக்கப்பட்டவர்களாகும்** (2 தெச. 2:14). இன்றைக்குக் கர்த்தராலோ அல்லது பரிசுத்த ஆவியானவராலோ எவரும் நேரடியாகவோ அல்லது தனிப்பட்ட விதமாகவோ அழைக்கப்படுவதில்லை. பவுல் இப்படிப்பட்ட அழைப்பைப் பெற்றார், ஆனால் அது அவரைக் கீழ்ப்படிவதற்காக மட்டுமில்லாமல், அவரை அப்போஸ்தலனாகத் தகுதிப்படுத்துவதற்காகவும் இருந்தது. ஒருவேளை தேவனுக்கு இருபத்தோறாம் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் தேவை என்றால், அவர் அவர்களை நேரடியாக அழைக்கக் கூடும். ஆனால் சபையானது "அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கத்தரிசிகள் ஆகியோரின் *அஸ்திபாரத்தின்* மீது கட்டப்பட்டிருக்காது" (எபே. 2:20-ல்; முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளது). தெய்வீக "அழைப்பை" எதிர்பார்த்து காத்திருக்கிற எவரும் வீணாக காத்திருக்கிறார்கள்.

சுவிசேஷ அழைப்பிற்குப் பதிலளிக்கிற எவரும் **நித்திய**

**சுதந்திரத்தை பெறுகின்றனர்**. "சுதந்திரமென்பது" எபிரெய நிருபத்தின் பொதுவான கருத்தாகும்.[41] இதற்கான கிரேக்க வார்த்தை *க்ளெரொநொமியா* (κληρονομία) என்பதாகும். இந்த வார்த்தையை பவுல் தன்னுடைய நிருபங்களில் அநேக முறை பயன்படுத்துகிறார்.[42] இது கிறிஸ்துவிற்குள்ளான நம்முடைய எல்லா நித்திய ஆசீர்வாதங்களையும் உள்ளடங்கியிருக்கிறது. அவர் "எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளி" (1:2), ரோமர் 8:17 ல் "உடன் பங்காளிகள்" என்று சுட்டியிருக்கும் சொற்றொடர் போன்று நாம் அவருடன் தேவனுடைய உடன்பங்காளிகளாக இருக்கிறோம். யூத (எபிரெய) கிறிஸ்தவர்களுக்கு இது ஆபிரகாமிற்கு அளிக்கப்பட்ட முக்கியமான வாக்குத்தத்தமாக நிறைவேறுதலாக இருக்கிறது (எபி. 6:12, 15, 17). இந்த கலாத்தியர் 3:6-9, 17, 18, 26-29-ல் குறிப்பிடப்பட்டவைகளுக்கு இசைவானது. இது ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களிலிருந்து தொடங்கின தேவனுடைய மீட்பின் திட்டத்தின் முழு நோக்கமாக இருக்கிறது.[43]

ஆக கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் கொண்டு வந்ததென்ன? அவர் நமக்கு நித்திய மீட்பை, ஒரு சுத்த மனச்சாட்சியையும், மற்றும் ஒரு புதிய உடன்படிக்கையையும் கொடுத்து இருக்கிறார். இந்தப் பெரிய இரட்சிப்பில் களிகூர்ந்து மகிழக்கடவோமாக.

## புதிய உடன்படிக்கையை எழுதினவரான கிறிஸ்து (9:16-22)

இந்தப் பகுதியில் நான்கு ஆவிக்குரிய அவசியங்களை நாம் காணலாம். இந்த ஒன்பது வசனங்களில் "அவசியம்" "வேண்டும்" என்ற வார்த்தை இருமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்னர் ஒரு பிரசங்கியார் "தேவன் என்ன செய்யக் கூடும்" என்ற தலைப்பில் பிரசங்கித்தார். அதில் அவர் செய்த ஒரு குறிப்பு என்னவெனில் "இயேசுவின் இரத்தமில்லாமல் தேவன் நம்மை இரட்சிக்க முடியாது," என்பதாகும். அநேகமாக அவர் எபிரெயரிலுள்ள இந்தப் பகுதியின் ஆய்வை மறைமுகமாகச் சுட்டினார். புதிய உடன்படிக்கை அல்லது ஏற்பாடு செயல் தாக்கமுள்ளதாக இருக்கச் சில நிபந்தனைகள் சந்திக்கப்பட வேண்டும்.

### ஒரு உடன்படிக்கை செயல்பாட்டிலிருக்கும் போது (9:16, 17)

**16ஏனென்றால் எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். 17எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.**

**வசனங்கள் 16, 17.** உயிலை அல்லது **உடன்படிக்கையை** (διαθήκη, *டயாதிகே*) எழுதினவருடைய **மரணத்தின் அவசியத்தை**

நாம் பார்க்கிறோம். ஒரு உயில் அதை எழுதினவர் மரிக்கும்போது தான் செயல்பாட்டிற்கு வரும் என்று இந்த உலகம் அங்கீகரிக்கிறது. ஒரு உயில் செயல்தாக்கத்திற்கு வரவேண்டுமென்றால் அதை எழுதினவருடைய மரணத்தின் சான்று இருக்க வேண்டும், அதைக் குறிக்கும்படிதான் "அவசியம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "எடுத்துச் செல்லுதல்" என்ற பொருளுடைய (φέρω, *ஃபெரோ*) என்ற வார்த்தையுடன் இணைந்து இந்த வார்த்தையானது சான்றளிக்கும் விதமாக "கொண்டு வருதல்" என்று பொருள்படுகிறது. உயில் எழுதினவரின் மரணத்தைச் சான்றுப்படுத்தும் பத்திரங்கள் பண்டைய பாப்பரஸ்களில் அதிகப்படியாகக் காணப்படுகிறது.

புதிய ஏற்பாடு அல்லது இயேசு கிறிஸ்துவினுடைய உடன்படிக்கையானது அதை நிறுவியவராகிய இயேசுவின் மரணத்திற்குப் பின்பே அமலுக்கு வந்தது. அவர் தமது சபையைக் கட்டுவதாக வாக்குப்பண்ணினார் (மத். 16:18), மேலும் தம்முடைய உடன்படிக்கையை அமலுக்குக் கொண்டுவந்தார். இரு வாக்குத்தத்தங்களும் அவருடைய மரணத்தின் விளைவாக இருந்தது (மத். 26:28 ஐ காண்க). மேசியாவுடைய மரணத்தின் அவசியத்தைக் கிரகத்துக் கொள்வதில் எபிரெயர்களுக்குப் பிரச்சனையிருந்தது, இந்தச் சித்தரிப்பானது "இந்த இடையூறை" மேற்கொள்வதற்காக ஒருவேளை கொடுக்கப்பட்டிருக்கலாம் (1 கொரி. 1:22, 23).

கிறிஸ்துவினுடைய ஏற்பாட்டின் இயல்பின் மீது வலியுறுத்தமானது மீண்டுமாகப் பழைய ஏற்பாடு நிறைவேறியது என்ற சத்தியத்தைப் பேசும் வகையாயிருக்கிறது. நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கு மாறாக, தற்போது கீழ்ப்படிவதற்குப் புதிய உடன்படிக்கையைப் பெற்றிருக்கிறோம். இயேசு பஸ்கா பண்டிகையின் போது மரித்தார். சபையானது அதன் பின்னர் ஏழு வாரங்கள் கழித்துப் பெந்தேகோஸ்தே நாளின் போது தொடங்கினது. இயேசுவின் பலிக்கு முன்னர் நிறுவப்பட்ட எந்த ஆசாரிப்பும் முழுமையான இரட்சிப்பை அளிக்க இயலவில்லை. அதாவது அவருடைய மரணக் காலத்திற்கு முன்னர் எந்தச் சபையும் இருக்கவில்லை. எப்படியாயினும், அவருடைய இரத்தத்தின் மூலம் அவருடைய சரீரமாகிய சபை (எபே. 1:22, 23; 5:23-25) நிலைத்திருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

எபிரெயரின் ஆசிரியர் "நித்திய சுதந்திரத்தைப்" பற்றிப் பேசினார் (வசனம் 15). சுதந்திரமானது சாதாரணமாக உயில் இல்லாமல் கிடைக்கப்பெறாத வரமாக இருக்கிறது. கிறிஸ்துவின் நிபந்தனைகளைச் சந்திக்காமல் இரட்சிப்பை பெற முயற்சித்தால் அது அவருடைய உடன்படிக்கையின் வழிமுறைக்கு வெளியே

முயற்சிப்பதாகும். சிலுவையின் மீதிருந்த கள்ளன் தான் மரிப்பதற்கு முன் இயேசுவால் இரட்சிக்கப்பட்டான். இயேசு உயிருடன் இருந்தபடியால் அந்தக் கள்ளனுக்கு ஒரு விசேஷ இரட்சிப்பைக் கொடுக்க முடிந்தது. இந்தக் கோட்பாடு புரிந்து கொள்ளப்பட வேண்டும், அவருடைய பரலோக பிரவேச வழியை நம்முடைய வழியோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. இந்தக் காலத்தில் இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டுமென்று அறிய விரும்புகிறவர்களுக்குப் புதிய ஏற்பாடானது தெளிவான திட்டத்தை அளிக்கிறது.

சிலுவையில் மரிப்பதற்கு முன்னர், இயேசு ஒரு புதிய பிறப்பைக் குறித்து விளக்கினார். அவருடைய மரணத்தைத் தொடர்ந்து எந்த அப்போஸ்தல பிரசங்கியாரும் மனந்திரும்பாத பாவிகளுக்கு அப்படிப்பட்ட ஒரு விளக்கத்தைப் பயன்படுத்தவில்லை. கர்த்தருடைய மரணத்தைப் பின் தொடர்ந்து, கர்த்தருடைய திட்டப்படி மன்னிப்பின் நிபந்தனைகளின் அவசியத்தை, உருவக மொழியைப் பயன்படுத்திக் கொடுக்கப்படாமல் நேரடியாகக் கொடுக்கப்பட வேண்டியதிருந்தது (மத். 28:18-20; மாற்கு 16:15, 16; லூக். 24:46, 47).

இயேசு நம்முடைய இரட்சகராக இருக்கிறார், நாம் அவருடைய சித்தத்தைப் பிரசங்கிக்க வேண்டும். நாம் செய்யக் கூடியதெல்லாம் புதிய உயிலின் நிபந்தனைகளைப் பிரசங்கித்து மக்களைக் கீழ்ப்படிய வலியுறுத்துவதாகும். இரட்சிப்பின் உறுதியை நாம் "உயிலின் சித்தத்திற்கு" அப்பாற்பட்டு அளிக்க முடியாது.[45]

நம்முடைய எழுத்தாளராகிய கிறிஸ்துவின் உயில் என்பது என்ன? "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்பதற்கு அப்பாற்பட்டு மாற்கு 16:15, 16 ல் அவர் எதைப் பொருள்படுத்தியிருக்கக் கூடும்? அது தான் அவருடைய உயிலாக இருக்கிறது! ஒருவேளை ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தால் என்ன நடக்கும்? இக் கேள்வியானது 1 பேதுரு 4:16, 17 ல் கேட்கப்பட்டு இதற்கான பதில் 2 தெசலோனிக்கேயர் 1:6-10 ல் அளிக்கப்பட்டிருக்கிறது: இதன் விளைவு நித்திய ஆக்கினையாகும். கிறிஸ்துவின் உயிலானது இரட்சிப்படைவதற்கு விசுவாசம் மட்டுமே அவசியமானது என்று பிரசங்கிப்பதற்கு வெறும் அனுமதியை மாத்திரம் கொடுப்பதில்லை. எஃப். எஃப். புரூஸ் அவர்கள் ஞானஸ்நானம் பெறாத சீஷர்களைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது சரியாக இருக்கிறது.[46]

**பழைய உடன்படிக்கையின் இரத்தம் (9:18-20)**

**18அந்தபடி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை. 19எப்படியெனில், மோசே,**

**நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும் தெளித்து: [20]தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான்.**

**வசனங்கள் 18, 19-ன்.** பழைய ஏற்பாட்டை உறுதி செய்கிற இரத்தத்தைக் குறிப்பிடுவதன் மற்றொரு அவசியம் இங்கே கூறப்பட்டுள்ளது: அந்தப்படி, **முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை** (வசனம் 18).

இரத்தத்தால் "பிரதிஷ்டை" பண்ணப்பட்ட "முதலாம் உடன்படிக்கை" எது?[47] இது மோசேயின் உடன்படிக்கை என்று தெளிவாக இருக்கிறது. இந்த உண்மையை யாத்திராகமம் 24:1-8 உறுதிசெய்கிறது. **மோசே** இந்தப் பலியின் **இரத்தத்திலிருந்து** பாதியை எடுத்து "சீனாய் மலையின் அடிவாரத்தில் அவர் ஏற்படுத்திய பலிபீடத்தின் மேல் தெளித்தார்."[48] இதற்கு இசைவாக இயேசுவும் தம்முடைய இரத்தமானது புதிய உடன்படிக்கையைப் பிரதிஷ்டை செய்யுமென்றார் (மத். 26:28).

சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமானது அவருடைய சீஷர்களால் ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியின்போது நினைவுகூரப்பட்டது (1 கொரி. 11:23-29).[49] நாம் நம்முடைய பாவங்களுக்காகக் கிரயமாகக் கொடுக்கப்பட்டு, புதிய உடன்படிக்கையைத் ஏற்படுத்தித் தந்த அந்த இரத்தத்தைப் பின்னிட்டுப் பார்க்கிறோம். மேலும் அந்த உடன்படிக்கையை எழுதினவரை ஒரு நாளில் காண எதிர்நோக்கியிருக்கிறோம்.

**வசனம் 20. உடன்படிக்கையின் இரத்தம்** (வசனம் 20) என்ற சொற்றொடரானது யாத்திராகமம் 24:3-8 லிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **புத்தகத்தின்** மேல் இரத்தம் **தெளிக்கப்படுதலை** யாத்திராகமம் குறிப்பிடவில்லை (வசனம் 19 ன்) ஆனால் இது அப்போதைய பொதுவான பழக்கமாக இருந்திருக்கக் கூடும். வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் உருவகமாக இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதென்று நாம் நினைக்கக் கூடும். அநேகமாகச் சிலுவையைக் குறித்த சம்பவமானது பழைய ஏற்பாட்டில் எண்ணுக்கடங்கா இடங்களில் சுட்டப்பட்டிருப்பதை நாம் காண முடியும். மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகவும், அதே பாவத்தையும் அதன் தண்டனையையும் தவிர்க்கும்படியாகவும், பாவத்தின் ஒவ்வொரு தண்டனையின் பின்பும் இரக்கம் காணப்படுகிறது (லேவி. 10:1-11ல் உள்ள எடுத்துக் காட்டுப்போன்று). யாத்திராகமம் தண்ணீர், சிவப்பான **ஆட்டு மயிர்,** மற்றும் **ஈசோப்பு** ஆகியவற்றைக் கூறுகிறது (வசனம் 19

ன்). இந்த வேறுபாடுகளின் மூலாதாரம் நமக்குத் தெரியவில்லை, ஒருவேளை இதன் ஆசிரியர் நமக்கு இப்பொழுது கிடைக்கப்பெறாத மூலாதாரங்களிலிருந்து எடுத்திருக்கக் கூடும்.[50] ஒவ்வொரு வேதாகம எழுத்தாளரும் ஆவியானவருடைய வழிகாட்டுதலின் கீழ் தங்கள் நோக்கத்திற்கு ஏற்புடையவற்றைத் தெரிந்து கொண்டனர்.

பொதுவாக ஆட்டுமயிரானது தெளிக்கப்பட்ட இரத்தத்தைப் பிடிக்க பயன்படுத்தப்பட்டது. மோசேயின் அறிக்கையானது (வசனம் 20 ல் குறிப்பிடப்படுகிற) மத்தேயு 26:28ல் கூறப்பட்டுள்ள இயேசுவின் அறிக்கையைப் போன்றுள்ளது. ஜொசிபஸ் அவர்கள் பிரதிஷ்டையைப் பற்றி எழுதுகையில் குறிப்பிட்டிருக்கும் அதே பொருட்களின் பெயர்கள் எபிரெய நிருபத்திலும் கூறப்பட்டிருப்பது கவனிக்கப்படத்தக்க ஒன்று.[51]

### இரத்தமில்லாமல் எதுவும் மூடப்பட மூடியாது (9:21-22)

**[21]இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமூட்டுகளிள்மேலும் இரத்தத்தைத் தெளித்தான். [22]நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.**

**வசனங்கள் 21, 22. பாவ மன்னிப்பிற்காகச் சிந்தப்படுகிற இரத்தத்தின்** மூன்றாவது அவசியத்தைக் குறித்து இப்பகுதியில் நாம் பார்க்கிறோம். இயேசுவின் மரணமில்லாமல் நாம் பாவத்திலிருந்து மன்னிக்கப்பட இயலாது.

**ஆசரிப்புக் கூடாரத்தில் தெளிக்கப்படுதலானது** 9:19, 20 ல் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்குப் பின்னர் நடந்தது, **நியாயப்பிரமாணம்** கொடுக்கப்படும் போது இவை வழக்கத்தில் இல்லை (காண்க யாத். 24:1-8; 40:9-11). **பாத்திரங்களின்** மேல் தெளிக்கப்படுதலைக் குறித்து மோசே எதுவும் சொல்லவில்லை, ஆனால் அவர் எதுவும் சொல்லாமல் இருப்பது இது நடக்கவில்லை என்பதற்குச் சான்றல்ல.[52] யூதர்கள் வாய்வழியான மற்றும் எழுதப்பட்ட பல பாரம்பரியங்களையும் கடைப்பிடித்தனர், அவைகள் இந்த ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தவறுகளுக்கெதிராகப் பாதுகாக்க இவர் தெய்வீக வழிநடத்துதலைக் கொண்டிருந்தார்.

பழைய ஏற்பாட்டில் இரத்தமில்லாமல் எதையும் **சுத்திகரிக்க** முடியாது என்றிருக்கும்போது, நமக்கும் நம்முடைய பாவங்கள் சுத்திகரிக்கப்பட இரத்தம் அவசியமாக இருக்கிறது. இங்கே நாம் இயேசுவின் இரத்தத்தையும் மிருகங்களின் இரத்தத்தையும் ஒப்பிட்டு "சிறியவையிலிருந்து பெரியவை" என்ற மற்றுமொரு விவாதத்தைக் கொண்டிருக்கிறோம். நியாயப்பிரமாணத்தின் கீழ் குறைந்த இரட்சிப்பை பெறுவதற்கு குறைந்த தகுதியுடைய பலிகள்

பெறப்பட்டன; புதிய உடன்படிக்கையின் கீழ் சிலுவையிலறையப்பட்ட குமாரனின் இரத்தம் நம்மை முழுமையாக இரட்சிக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைக்கப் பெறுகிற மிகுந்த நன்மை யாதெனில் அது நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கிறது. இந்த மாபெரும் பலியில்லாமல் எந்த ஒரு ஆத்துமாவும் இரட்சிக்கப்பட முடியாது. இந்த இரத்தத்தின் வல்லமையானது இயேசு கிறிஸ்துவிடம் மீட்பிற்காக வருகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கப் பெறுகிறது (வெளி. 1:5). நாம் "ஒளியில் நடக்கும்போது" அது நம்மில் தொடர்ச்சியாகக் கிரியைச் செய்து நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7).

வசனம் 22 லிருக்கிற இரத்தம் தான் சுத்திகரிக்கிற வழி என்ற விதிமுறைக்கு வசனங்கள் அரிதாக விதிவிலக்கை அளித்தது ஆனாலும் அது தான் இன்றளவும் பொதுவான விதிமுறையாக இருக்கிறது. மிகவும் ஏழையாக இருக்கிற ஒருவர் பாவ பலியாக இரண்டு புறா குஞ்சுகளைக் கொண்டு வர லேவியராகமம் 17:11 ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது: அவன் ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டுவரவேண்டும் (லேவி. 5:11-13 ஐ காண்க). எப்படியாயினும் பாவத்தின் முழுமையான மீட்புக்கு எந்த விதிவிலக்கும் கொடுக்கப்படவில்லை - பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட இரத்தஞ்சிந்துதல் எப்போதும் அவசியப்பட்டது. வெறும் மாவை மட்டும் அளிக்கிற யூதர்களுக்காக மற்றவர்கள் செய்த இரத்தப்பலிகள் கணக்கில் கொள்ளப்பட்டதா? அதாவது பலிபீடத்தின் மீது ஏற்கனவே இருக்கிற இரத்தப் பலியின் மீது இந்தத் தானிய பலி வைக்கப்பட்டிருக்கும் சாத்திய கூறு இருக்கிறது (லேவி. 5:12).

ஒரு மிருகத்தின் உயிராகிய இரத்தத்தைப் பலியிடுதலானது பாவம் ஒரு தீவிரமான காரியம் என்று இஸ்ரவேலரின் மனதில் பதிய வைக்கும்படியாக இருந்தது. இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் பயன்படுத்தப்பட வேண்டும்: ஒரு ஆடு "போக்காடாக" பாவத்தை அடையாளமாக வனாந்திரத்திற்குச் சுமந்து சென்றது, மற்ற ஒன்று மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு இரத்தம் கொண்டு செல்ல கொல்லப்பட்டு அதன் இரத்தம் கிருவாசனத்தின் முன் தெளிக்கப்பட வேண்டியதாக இருந்தது. "இயேசுவின் மரணம் ஒரு விசுவாசியை பாவ கறைகளிலிருந்து சுத்திகரிக்க, பாவத்தை ஒரே தரம் சுமந்து தீர்ப்பதையும் மற்றும் சுத்திகரிப்பதையும் சித்தரிக்க இரு செயல்களுமாக இருந்தது."[53]

தண்ணீரினால் கழுவுதல் (வசனம் 19). சில விளக்கவுரையாளர்கள்; லேவியராகமம் 15:13-27 லும், எண்ணாகமம் 19:7-19 லும் காணப்படுவதுபோன்று இதை இரத்த விதிமுறைக்கு விலக்கானது என்று கூறுகின்றனர். இவைகள் "சுகாதாரம் மற்றும் சடங்காச்சாரமானவைகள்" மேலும் "இரத்தச்சிந்துதலுக்கு புறம்பாக காணப்படவில்லை."[54]

# தேவனுடைய சமூகத்திற்கு இயேசுவின் பிரவேசம் (9:23-28)

**பரலோக மாதிரிகள் (9:23, 24)**

**[23]ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே. [24]அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.**

வசனம் 23 ன். நான்காம் அவசியம் கொடுக்கப்பட்டிருக்கிறது: ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது.

கிறிஸ்து பரலோகத்திற்கே பிரவேசிப்பதை நாம் மீண்டுமொரு முறை காண்கிறோம் (வசனம் 24). நாம் இன்னமும் "எபிரெயரின் இருதயப்பகுதிக்குள்" இருக்கிறோம். "வேண்டியதாயிருந்தது" என்ற சொற்றொடரானது ஆசாரிப்பு கூடாரத்தின் பாத்திரங்கள் கழுவப்படாமலும் சுத்திகரிக்கப்படாமலும் இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆராதனையாக இருக்க முடியாது என்று எடுத்துரைக்கிறது. வெளிப்படையாகவே உடன்படிக்கையின் புத்தகமும் அதன் மேல் இரத்தம் தெளிக்கப்படுதலில்லாமல் சுத்தமாக இருக்க முடியாது. ஆக "ஒட்டுமொத்த இறையாட்சியும்" இரத்தமில்லாமல் மதிப்பற்றதாக இருக்கும்.[55]

பரலோகத்திலுள்ளவைகள் மற்றும் விசேஷித்த பலிகள் எவை? இயேசுவின் ஒரே பலியே இவைகள் அனைத்தையும் பொருள்படுத்துகிறது, ஏனெனில் பழைய உடன்படிக்கையின் கற்பனை செய்த பலிகளின் நோக்கத்தை இது நிறைவேற்றியது. பூமிக்குரிய கூடாரத்திலிருந்தவைகள் பரலோகத்திலிருந்தவைகளின் நிழலாக மட்டுமே இருந்தது. 8:2-5 ல், பரிசுத்த ஸ்தலமானது சபைக்கும் மகா பரிசுத்த ஸ்தலமானது பரலோகத்திற்கும் முன்னடையாளமாக நமக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

நிச்சயமாகவே, தேவன் வாசம் செய்கிற பரலோகம் இரத்த பலிகளால் சுத்திகரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. எப்படியாயினும் இந்த "பொருட்கள்" என்பது "பரலோகத்திலுள்ளவைகள்" பூமியிலுள்ளவைகளை, விசேஷமாகச் சபையை அல்லது இரட்சிக்கப்பட்ட பாவிகளடங்கிய "பரலோக இராஜ்ஜியத்தை" உள்ளடக்கி இருக்கக் கூடும். பரலோகத்தின்

இராஜ்ஜியத்திற்குள் வெளிப்படையாகவே பிரவேசிக்கிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் இங்கு விவரிக்கப்பட்டுள்ள முறைமையின்படி இவ்வாழ்க்கையில் கண்டிப்பாகச் சுத்திகரிக்கப்பட வேண்டும். “பரலோகத்திலுள்ளவைகள்” என்ற சொல் அநேகமாகப் பரலோக இராஜ்ஜியமாகிய பூமியிலுள்ள சபையைக் குறிப்பிடக் கூடும்.[56]

இந்தக் குறிப்பை தவிர்த்து, சிலர் சாத்தானின் பிரசன்னம் அல்லது வான மண்டலங்களிலிருக்கிற பொல்லாத தேவதூதர்கள் அங்கு சுத்திகரிக்கப்படுதல் அவசியமானதற்கு காரணம் என்று கூறுகின்றனர் (எபே. 6:12; வெளி. 12:3-9 காண்க).[57] ஒருவேளை இதன் ஆசிரியர் நம்மால் முழுவதுமாகப் புரிந்துக்கொள்ள இயலாத ஒப்பீட்டை பயன்படுத்தியிருக்கக் கூடும். ஒரு சிலர் முன்பே இரட்சிக்கப்பட்டு எபிரெய நிருபம் எழுதப்படும்போது அவர்களுடைய பாவங்கள் இன்னமும் சுத்திகரிக்கப்பட வேண்டி மகிமையிலிருந்தவர்களுக்காக சொல்லப்பட்டிருக்கலாம் என்று எண்ணினர். எப்படியாயினும், இந்தக் கருத்துக்கோணம் சரியாக இருக்க முடியாது, ஏனெனில் இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் முழு விளைவுகளை மறுக்கிறது. சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினபிறகு, இயேசு இரத்தத்துடன் பரலோகத்திற்குச் சென்றார். அங்கே இன்றைக்கு நம்முடைய பிரதிநிதியாக அவர் தொடர்ந்து ஊழியம் செய்கிறார்.

**வசனம் 24. தற்போது** என்ற வார்த்தையானது “பழைய வணிக முன்னடையாளமான உடன்படிக்கைக்கு முரண்பட்டு, புதிய உடன்படிக்கையின் காலத்து மேசியாவின் ஊழியத்தைச் சிறப்பான முக்கியத்துவத்தையும், பரலோக மகா பரிசுத்த ஸ்தலத்தில் தம்மைத் தாமே தொடர்ச்சியாக வெளிப்படுத்துகிறதையும் அனுமானிக்கிறது.”[58] **கிறிஸ்து** நம்முடைய நன்மைக்காகவே அங்கிருக்கிறார். 7:25-ல் வலியுறுத்துவது போன்று, அவர் தற்போதும் நம் சார்பில் செயல்படுகிறார்.

“விசேஷித்த பலிகள்” (வசனம் 23) என்ற வார்த்தைகள் எபிரெயரிலுள்ள விசேஷித்த நம்பிக்கையூட்டப்பட்ட (7:19), விசேஷித்த உடன்படிக்கை (7:22; 8:6), மற்றும் விசேஷித்த வாக்குத்தத்தம் ஆகிய “விசேஷங்களை” நமக்கு நினைவூட்டுகிறது. இவைகள் அனைத்தும் விசேஷித்த பலியால் வந்தவைகளாகும் (9:23). மீண்டுமாகக் கிறிஸ்துவினுடைய மேலானத்தன்மை என்ன செய்தது என்பதும், நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும் வெளிப்படையாக இருக்கிறது.

வசனம் 24 ஆனது ஆசாரிப்புக் கூடாரம் ஒரு அசலின் **நகலாக** இருக்கிறது (ἀντίτυπος, *ஆண்டிடுபொஸ்*) என்ற தகவலை தெரிவிக்கிறது. இது நம்பத்தகுந்ததற்கான “பிரதிநிதியாக” இருக்கிறது.[60] இந்தச் சங்கதியானது ஆசாரிப்புக் கூடாரம் பூமியின் மீது நகலாகவும், **பரலோகம்** அசல் தன்மையாகவும் இருக்கிறதாகக் கூறுகிறது.

ஆசாரிப்புக் கூடாரமானது “பரம எருசலேம்,” “பொதுவான கூடுகை,” மற்றும் முதற்பேறானவரின் சபை” என்று “சீயோன் மலைக்கு” அடையாளமாக இருக்கிற சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறது (12:22-24). இந்தக் கருத்துக்கள் அனைத்தும் தற்போது “பரலோகத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள” அங்கத்தினர்களடங்கிய சபையில் நிறைவேறியிருக்கிறது, ஏனெனில் அவர்கள் “அனைவரும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கு” வந்திருக்கிறார்கள்.

ஆசாரிப்புக் கூடாரம் செய்ததை விடச் சபையானது உண்மையான மற்றும் விசேஷித்த வடிவத்தில் பரலோகத்தைப் பிரதிபலிக்கிறது. இது பரலோகத்தின் உண்மையான முன் கூடமாக இருக்கிறது. இதனுள் உண்மையுள்ளவர்களாக இருப்பவர்கள் நித்தியமாக வாசம்பண்ணுவார்கள். இந்த எண்ணங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, பரலோகமானது தேவனுடைய திட்டத்தின் முழு மகிழ்ச்சியும், மீட்படைந்த மனிதருக்கு அவருடைய திட்டமுமாக இருக்கிறது.

தேவன் தம்முடைய மக்களுக்கு அவருடைய இரட்சிப்பை அளிக்க தெய்வீக நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கிறது. இவைகளனைத்தும் கிறிஸ்துவின் இரத்தத்தில் நிறைவேறினது. அவருடைய மரணம் புதிய உடன்படிக்கையைச் செயல்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அவருடைய இரத்தமானது கிறிஸ்தவர்களின் பாவத்தை மட்டுமல்லாது ஒவ்வொரு ஆண்டும் தேவனுடைய பூரணப் பலியை எதிர் நோக்கி, மிருக பலிகளைச் செலுத்திய பழைய ஏற்பாட்டு விசுவாசிகளின் பாவங்களையும் நீக்கிப் போட்டது. பரலோகத்தின் நகல்களைக் கழுவுவதற்குத் தம்முடைய இரத்தத்தை அனுமதிக்கையில், கிறிஸ்து நம்மைத் தேவனுடைய உண்மையான சமூகத்திற்குச் செல்ல தகுதிப்படுத்தினார்.

கிறிஸ்தவமானது “ஒரே தரம்” என்று பண்பிடப்பட்டிருக்கிறது (10:10). இது யூத மதத்தை விட மேலானது, ஏனெனில் கடைசிக் காலத்தில் கொடுக்கப்பட்ட தேவனுடைய கடைசி உடன்படிக்கையாக இருக்கிறது. எபிரெயர் 9:25-28 ல் பயன்படுத்தப்பட்டுள்ள “ஒரே தரம்” என்ற வார்த்தையைக் கவனிக்கவும்.

### இயேசு ஒரே தரம் பலியாகத் தந்தார் (9:25, 26)

**25பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை.**
**26அப்படியிருந்ததானால் உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல அவர்**

**தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிகாலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.**

**வசனம் 25.** பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளின் ஒற்றுமைகளைக் காட்டின பிறகு, எபிரெய நிருபத்தின் ஆசிரியர் வேறுபாடுகளின் மீது அழுத்தம் தரத் தொடங்கினார். வசனம் 24 வேறுபாடுகளை அறிமுகப்படுத்துகிறது. இயேசு வெறும் பூமிக்குரிய **பரிசுத்த ஸ்தலத்தில்** பிரவேசிக்காமல் பரலோகத்திற்குச் சென்றார். அவர் தம்மை மறுபடியும் மறுபடியுமாகப் **பலியாகவும்** தம்முடைய **இரத்தத்தையும்** செலுத்தவில்லை, அவர் ஒரே தரம் செலுத்தினார். பழைய ஏற்பாட்டு ஆசாரியன் **தன்னுடைய** இரத்தத்தைச் செலுத்தவில்லை, ஒருவேளை அவர் செய்திருந்தால் அது "பாவக்கறை படிந்ததாக இருந்திருக்கும்." மேலும், புதிய முறைமையானது பழையதைப் போன்றிருக்குமெனில் இயேசு ஒவ்வொரு ஆண்டும் சிலுவைக்குச் சென்றிருக்க வேண்டியதாக இருந்திருக்கும். இந்த முரண்பாடு 9-ம் அதிகாரத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"பரிசுத்த ஸ்தலத்திற்கான" (ἅγιος, *ஹெகியோஸ்*) என்ற பதமானது கிரேக்கத்தில் பன்மையிலிருந்தது, அது வியாக்கியான பூர்வமாக "பரிசுத்தத்தின் பரிசுத்த ஸ்தலம்" அல்லது "மகா பரிசுத்த ஸ்தலம்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது (NJKV; NIV).[61] மேலும் **பிரவேசிக்கிறதுபோல** என்ற வார்த்தை நிகழ் காலத்திலிருக்கிறது, இது எபிரெய நிருபமானது எழுதப்படும்போது பிரதான ஆசாரியனானவன் தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தான் என்பதைக் குறிக்கிறது.[62]

வசனம் 25 மற்றும் 26 ல் மூன்று சத்தியங்கள் கூறப்பட்டுள்ளது: (1) கிறிஸ்து நித்தியமானவர் (2) அவருடைய பலியானது பின்னுக்குச் சென்று கடந்த காலத் தலைமுறையினரின் பாவங்களோடு இடைப்படுகிறது (9:15 ல் காணப்படுவதுபோல), மற்றும் (3) அவர் தம்முடைய சொந்த இரத்தத்தை அளித்தார், ஆனால் பழைய ஏற்பாட்டு ஆசாரியன் மிருகங்களுடைய பலியை மட்டுமே செலுத்தினான். எனவே கிறிஸ்து மீண்டும் மீண்டுமாகச் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாகிறது. இந்த வசனம் அவர் தம்மைப் பரலோகத்தில் தொடர்ச்சியாகப் பலி செலுத்துகிறார் என்ற போதனையையும், பூமிக்குரிய ஆராதனையானது திரும்பத் திரும்பச் செய்யப்படுகிற பலி என்ற இறையியல் கருத்துக்கும் எதிர்மறையாக இருக்கிறது.[63] இப்படிப்பட்ட போதனைகள் இந்த நிருபத்தோடு தெளிவாகவே முரண்படுகிறது. பூமியில் தான் நடப்பித்த ஒரே ஒரு பலியின் அடிப்படையில் கிறிஸ்து கிருபையின் சிங்காசனம் முன்பு நித்தியமாக காட்சியளித்தார்.

9:24-28 வரை கூறப்பட்டுள்ள இயேசுவின் மூன்று "பிரவேசங்களை" கவனிக்கவும். வசனம் 24 பரலோக பிரவேசத்தைக் கொண்டுள்ளது. வசனம் 26 இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்

என்பதைக் காட்டுகிறது. மேலும் 28 ஆம் வசனம் "அவர் இரண்டாம் தரம் தரிசனமாவார்" என்று கூறுகிறது. பவுல் "மாம்சத்தில் *வெளிப்பட்டார்*" (1 தீமோ. 3:16 வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன) என்று கூறும்போது, இந்த வசனத்தில் (φανερόω, *ஃபநெரோ*). காணப்படும் அதே விதமான வினைச் சொல்லை பயன்படுத்தினார்.

**வசனம் 26. இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம்** என்பது "கடைசி நாட்களுக்குள்" வழிநடத்துதலைக் குறிப்பிட வேண்டும் (1:2). தெளிவாக, நாம் வாழும் காலம் உலக வரலாற்றின் கடைசிக் காலப்பகுதி அல்லது காலத்தின் ஒரு தொடர்வரிசையில் இறுதியானது.

இந்தச் சொற்றொடர், கலாத்தியர் 4:4-ஐ ஒத்த அதே உட்பொருளைக் கொண்டுள்ளது: "காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்." இது வெளிப்பாடு "நிறைவேறிய காலம்" என்பது பொருள், கிறிஸ்து உலகத்தில் வந்தபோது காலம் "முழுமையாக வந்துவிட்டது" என்று நினைவுகூருகிறது என்று புரூஸ் பரிந்துரைத்தார். "கிறிஸ்து நிறைவேறிய காலத்தில் வர நேர்ந்தது என்பதல்ல, ஆனால் அவரது வருகை அந்தக் காலத்தை நிறைவேறிய காலமாக்கியது" என்று அவர் கூறினார்.[64]

இதுபோன்ற சொற்றொடர் கிறிஸ்தவச் சகாப்தத்திற்குப் பிறகு ஒரு ஆயிர வருட காலத்திற்கு இடம் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல் அனைத்து காலத்திற்கான இறுதி **பலியை** வழங்கி, தேவனின் கடைசிக் காலச் செய்தியை மனிதகுலத்திற்கு அளித்து, கடைசி "நாட்களுக்குள்" வழிநடத்துகிறது (1:2). பூமிக்குரிய வரலாற்றில் கிறிஸ்து முன்பு வந்து, தொடர்ந்து மீண்டும் மீண்டும் பாடுபடவில்லை; மாறாக, அவர் "வரலாற்றின் உச்சக்கட்டத்தில்" வந்தார். உண்மையில், பலிக்கான அனைத்து ஆவிக்குரிய தேவைகளுக்கும் சிலுவை இறுதியானதாக அல்லது உச்சக்கட்டமாக இருந்தது.

உலகம் அதை நம்புகிறதோ இல்லையோ, கிறிஸ்துவின் இரத்த பலியினிமித்தம் அவருடைய வருகை அனைத்து வரலாற்றின் மையப் புள்ளியாக உள்ளது. இறுதி நிகழ்ச்சி சிலுவையில் இயேசுவுடன் ஆரம்பித்தது. எப்பொழுதும் மீட்கப்பட்டவர்களின் பாவங்களை **நீக்கும்பொருட்டு** அவர் வந்தார். "நீக்கும் பொருட்டு" என்பதற்கான பண்டைய ஆவணங்களில் (பாப்பிரஸ்) வலிமை மிக்க ஒரு வார்த்தை "ஒழிக்க" அல்லது "ரத்து செய்ய" என்பதாகும்.[65] பிதாவின் மகிமையைக் காண்பிக்கும் விதமாக இயேசு மாம்சத்தில் **வெளிப்பட்டார்** (யோவான் 1:14; 14:7-9; கொலோ. 2:9).

நாம் கடைசிக் காலத்தில் இருக்கிறோம் என்பதை உறுதி செய்யலாம் என்றாலும், கிறிஸ்துவுடைய வருகையின் கடைசிச்

சில நாட்களுக்கு முன்பு நாம் வாழ்கிறோம் என்பதற்கு வேதவசனங்களிலிருந்து நமக்கு எந்த உறுதியும் இல்லை. பூமியிலிருந்த போது இயேசு திரும்பி வரும் சமயத்தை அவர் அறியவில்லை என்றால் (மத். 24:36; மாற்கு 13:32), நம் நாளில் அவரது உடனடி வருகையைக் குறிக்கும் "காலங்களின் அறிகுறிகளை" நாம் அறிந்து கொள்வது பற்றித் தாழ்மையுடன் இருக்க வேண்டும்.

இயேசு "வெளிப்படுத்தப்பட்டார்" என்பது ஜனங்கள் அவரைப் பார்த்து அறிந்து கொள்ளும்படியாக அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (யோவான் 1:14) என்று அர்த்தமாகிறது, பாவத்திற்கு மரிக்கும்படியாக அவர் ஒரு மாம்ச சரீரத்தைக் கொண்டிருக்க வேண்டும் (எபி. 2:14-17; 10:5-7).

### ஒரு மரணம், பின்பு நியாயத்தீர்ப்பு (9:27, 28)

**27அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, 28கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.**

**வசனம் 27. நியமிக்கப்பட்டிருக்கிற** ἀπόκειμαι (*அப்போகெய்மெய்*) என்ற வார்த்தை "தள்ளி வைக்கப்பட்டது" (NASB) அல்லது "வைத்து" (KJV) என்று லூக்கா 19:20 ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகும். கொலோசெயர் 1:5-ல் "பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்" என்று பேசுவதில் இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு நியமனம் செய்யப்பட்டிருக்கிறது; ஏதோ ஒன்று நமக்காக "காத்துக்கொண்டிருக்கிறது" அல்லது "வைக்கப்பட்டிருக்கிறது," அது நரகத்தின் தண்டனையாகவோ அல்லது பரலோகத்தின் மகிமையாகவோ இருக்கலாம்.

இங்கே வலியுறுத்துவது, கிறிஸ்து ஒரு தரம் பலியிடப்பட்டு, இன்னும் ஒருமுறை காணப்படுவது போல, மனிதன் **ஒரே தரம்** பிறக்கிறான், ஒரே தரம் வாழ்கிறான், ஒரே தரம் மரிக்கிறான், பின்பு ஒரே தரம் **நியாயத்தீர்ப்படைகிறான்**. நாம் ஒவ்வொருவரும் மரிக்கும் நேரத்தை தேவன் முன்குறித்திருக்கிறார் என்று ஆசிரியர் கூறவில்லை, ஆனால் நம் எல்லாருக்கும் மரணம் என்பது நிச்சயம். நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் இருக்கும்போது, நியாயத்தீர்ப்பு நாளில் நம்மை உண்டாக்கியவரை எதிர்கொள்ள வேண்டும் என்பதே திகிலாக இருக்கிறது.

**வசனம் 28. கிறிஸ்து ஒரே தரம் வந்தார்**, அவரது மரணத்தைத் தொடர்ந்து உயிர்த்தெழுந்த பின் அவருடைய சீஷர்களுக்குக்

காணப்பட்டு, மீண்டும் ஒரு முறை வருகிறார். கிறிஸ்துவின் **இரண்டாம்** வருகை அல்லது காட்சியளித்தல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே வேதபகுதி இதுவே ஆகும். நிச்சயமாக, இது வேறு ஒரு இடத்தில் குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (அப். 1:11). அவர் “எல்லாருக்கும் பின்பு … பவுலுக்கு தரிசனமானார்” (1 கொரி. 15:8) மற்றும் அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னதாகத் தரிசனமாக மாட்டார் என்ற கருத்துக்கு இது இசைவாக இருக்கிறது. சமீப காலங்களில் கிறிஸ்து மீண்டும் மீண்டும் தோன்றினார் என்ற சிலருடைய வீணான கற்பனையைத் தவறு என எடுத்துக் காட்டுகிறது.

யாரை அவர் கடைசியாக இரட்சிப்பார்? அவருக்காக ஆவலுடன் **காத்திருப்பவர்களை** அவர் இரட்சிப்பார்.[66] கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை “ஆவலுடன் விரும்புவதாக” நமது அணுகுமுறை இருக்க வேண்டும் (2 பேதுரு 3:12). நம்முடைய ஜெபங்கள் “கர்த்தராகிய இயேசுவே, வாரும்” என்ற வேண்டுதலையும் செய்ய வேண்டும் (வெளி. 22:20). அந்த சம்பவம் நிகழ்வதற்காக உண்மையாகவே ஜெபம் செய்ய வேண்டுமென்றால் சில ஆர்வங்கள் தேவை. நாம் கிறிஸ்துவின் வருகைக்காக “ஆவலுடன் காத்திருக்க” வேண்டும் (வசனம் 28). விசுவாசத்தில் பலவீனமானவர்களுக்கு அது ஒரு பிரச்சனையாக இருக்கலாம். 2 பேதுரு 1:6, 7-ல் குறிப்பிடப்பட்டுள்ள “கிறிஸ்தவ நற்குணங்களை” அடைவதற்கு அவன் போராடினால் இதைச் செய்ய முடியும் என்று பேதுரு குறிப்பாக சுட்டிக்காட்டினார். பட்டியலில் உள்ள கிறிஸ்தவக் குணவியல்புகளில் “ஜாக்கிரதையாக” வாழ்க்கையில் வளரும் ஒருவனுக்கு, பேதுரு கூறினார், “… உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை” (2 பேதுரு 1:10). விசுவாசத்தின் நம்பிக்கை நிலையை ஒருவன் அடையும் பொழுது அவன் “தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருப்பான்” (2 பேதுரு 3:12). “தேவனுடைய நாளையும் அது வேகமாய் வரவும் நீங்கள் எதிர்நோக்குங்கள்” என்று வசனத்தில் வாசிக்கிறோம்.

இயேசுவின் மீண்டும் வருதல் பற்றி நாம் மகிழ்ச்சியடைய முடியுமா? உண்மையில் விரைவில் அவருடைய வருகைக்கு நாம் எதிர்பார்ப்புடன் இருக்க முடியுமா? அப்படியானால், “ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” என்று நாம் யோவானுடன் ஜெபிப்போம் (வெளி. 22:20). இரண்டாம் வருகை பற்றிய சரியான மனப்பான்மை தொடர்பான ஒரு குறிப்பு பவுலால் அளிக்கப்பட்டது. “இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” என்று அவர் கூறினார்

(2 தீமோ. 4:8). ஒருவன் முதல் வருகையை நேசித்து அதைப் புரிந்துக்கொண்டால், கர்த்தர் மீண்டும் வரும்போது அவரைப் பார்ப்பதற்கு அவன் நிச்சயமாக ஆர்வத்துடன் வளருவான்.

சுவிசேஷத்தை நிராகரிக்கிற ஒருவன் நித்திய ஜீவனுக்குத் தகுதியற்றவனாகத் தன்னைத்தானே எண்ணுகிறான் (அப். 13:46). ஒருவன் இரட்சிப்பின் வழிமுறையான நற்செய்தியை நிராகரிக்கும்பொழுது, அவன் அதை நிலையானதாகத் தேர்வு செய்கிறதால் அவன் அதனால் கண்டிக்கப்படுகிறான் (யோவான் 12:48).

ஏசாயா 53:10-12-ல் இயேசு நம் பாவங்களைச் சுமந்துகொள்ளும் கருத்தை முன்னறிவித்தது. **அநேகருடைய பாவங்களைச் சுமந்து** என்று கூறுவதில் எபிரெயரின் ஆசிரியர் ஏசாயாவின் இந்தப் பகுதியை மனதில் கொண்டிருந்திருக்கலாம். "அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" என்று ஏசாயா எழுதினார் (53:11). ஏசாயா 53:12-ல் காணப்படும் வார்த்தைகளைக் கிட்டத்தட்ட 28-லும் வசனம் குறிப்பிடுகிறது. அந்த அறிக்கை கிட்டத்தட்ட ஏசாயா 53:12-ல் காணப்படுகிற அதே போல வார்த்தைகள் வசனம் 28-ம் காணப்படுகிறது. யோவான்ஸ்நானகன் "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறி அதே கருத்துடன் இயேசுவை அறிமுகப்படுத்தினான் (யோவான் 1:29).

பாவநிவாரண நாளன்று பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வருவதற்காக யூத மக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். தேவன் அவனுடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டார் என்பதை அவனது தோற்றம் சுட்டிக்காட்டியது. இது கிறிஸ்துவின் இறுதி வருகைக்கு ஒரு முன்நிழலாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் ஆனால் இணையான தொடர்பை எபிரெய கிறிஸ்தவர்களால் அறிந்து கொள்ள இது உதவுகிறது.

இயேசு "எல்லாக் காலத்துக்காகவும் ஒரேதரம்" மரித்தார், நாம் ஒருமுறை மரிப்போம், கிறிஸ்து இன்னும் ஒரு முறை வருவார். இந்த "ஒரேதரம் அநேகருடைய" என்பது நமது இறுதியான, நித்திய இரட்சிப்பைச் சுட்டிக்காட்டுகிறது.

## மேலும் ஆய்வுக்கு: சிலுவையில் கள்ளன்

சிலுவையின் மீது கள்ளன் காப்பாற்றப்பட்டது போல் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஆசை, பொதுவாகக் கிறிஸ்துவின் கடைசி சித்தத்தைப் பற்றி யோசித்துப் பார்க்காத ஒருவனால் வெளிப்படுத்தப்படுகிறது. அவரது மரணத்திற்குப் பின்பும் பூமியை விட்டுச் செல்லும் முன்பும், புதிய உடன்படிக்கையில் பங்கு பெறுவதற்காக அவர் குறிப்பிட்ட நிபந்தனைகளைக் கொடுத்தார்.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக்

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத். 28:18-20).

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:15, 16).

எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லூக். 24:46, 47).

அப்போஸ்தலர் நடபடிகளில் அவருடைய சித்தம் நிறைவேற்றப்பட்டடதை வாசிக்கலாம்.[67] அப்போஸ்தலருடைய உதாரணங்கள் வல்லமை வாய்ந்தவை; மனமாற்றத்தின் ஒவ்வொரு விரிவான விஷயத்திலும், ஞானஸ்நானம் குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசம் எப்போதும் குறிப்பிடப்படவில்லை, இருப்பினும் அது அவசியமானது மேலும் அப்போஸ்தலர் முழுவதும் இது குறிக்கப்பட்டுள்ளது என்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறே மனந்திரும்புதல் எப்போதும் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அது எப்போதும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. தெளிவாக, ஆரம்பத்தில் மனம் மாறியவர்கள் தண்ணீரில் முழுக்கப்பட்டனர் (அப். 8:36; 10:47). அப்போஸ்தலர் 16:33-ல் மூழ்குவது சிறைக் காவலன் "அவர்களைக் கொண்டுபோய்" ஞானஸ்நானம் பெற்றான் என்று குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. இந்த ஞானஸ்நானம் தண்ணீரில் மூழ்கத் தேவையில்லை என்றால், அது சிறையில் செய்யப்பட்டிருக்கலாம். உங்கள் கர்த்தரும் மீட்பருமானவரின் சித்தத்தையா அல்லது ஞானஸ்நானம் தேவையற்றது என உங்களுக்குக் கூறுகிற ஒருவரையா, யாரை நீங்கள் நம்புவீர்கள்?

இயேசு உயிரோடு இருந்தபோது அவருக்கு விருப்பமான முறைமையில் யாரையும் அவரால் இரட்சிக்க முடிந்தது. அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று அவர் விபச்சாரத்தில் சிக்கிய ஒரு பெண்ணிடம் கூறினார் (யோவான் 8:1-11). அவர் திமிர்வாதக்காரனை குணமாக்கும் முன் அவனிடமிருந்து எதையும் கேட்காமல் அவனை மன்னித்தார் (மாற்கு 2:5). எனினும், இவர்கள் அனைவரும் கிலுவையில்

கிறிஸ்து மரிப்பதற்கு முன் இரட்சிக்கப்பட்டார்கள். இயேசுவின் சித்தம் நடைமுறையில் இருந்திருக்கவில்லை. சிந்தப்பட்ட அவருடைய இரத்தம் புதிய ஏற்பாட்டை அதன் கட்டுப்பாடுகளுடன் உறுதிப்படுத்தியது (மத். 26:28). அதே வழியில், நான் உயிருடன் இருக்கும்போது, என்னிடமுள்ள ஏதேனும் ஒன்றை கட்டுப்பாட்டுடன் அல்லது கட்டுப்பாட்டு இல்லாமல் நான் விட்டுவிடலாம். என் மரணத்திற்குப் பிறகு, நான் வைத்துச் சென்ற வெகுமதியைப் பெறுவதற்காக, என் உயிலில் நான் கூறி இருந்திருந்த எத்தகைய கட்டுப்பாட்டையும் ஒருவர் சந்திக்க வேண்டியதாக இருக்கும். அதனால் தான் கிறிஸ்துவின் உயிலின்படி: அவர் உயிருடன் இருந்தபோது, அவர் விரும்பியபடி மக்களை மன்னிக்க அவர் திவ்விய வல்லமை கொண்டிருந்தார் (அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தைக் காண முடிந்தது என்றாலும்). இன்றைக்கு, கிறிஸ்துவின் உயிலுக்கு விதிவிலக்கு அளிக்க அவர் நேரடியாக யாரிடமும் பேசவில்லை.

சிலுவையில் இருந்த கள்ளன் முன்பு ஞானஸ்நானம் பெற்றானோ இல்லையோ என்பது பொருத்தமற்றது. அவன் யோவானின் ஞானஸ்நானத்தால் ஞானஸ்நானம் பெற்றான் என்பது சாத்தியம் (பார்க்க மத். 3:4-6), அல்லது அவருடைய சீஷர்களால் இயேசுவின் ஞானஸ்நானம் பெற வந்த பலர் மத்தியில் அவனும் இருந்திருக்க சாத்தியம் உண்டு (யோவான் 4:1, 2). இருந்த போதிலும், கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் முன்பு அவன் வாழ்ந்தான் - அப்பொழுது இரட்சகர், நமது உயில் எழுதியவர், இன்னும் உயிருடன் இருந்தார். அன்றைய தினம் அவன் பரதீஸில் அவனுடன் இருப்பார் என்று இயேசு அந்த மனிதனுக்கு உறுதியளித்து (லூக். 23:39-43), அவன் அந்த அறிவிப்பின் கட்டத்தில் இரட்சிக்கப்பட்டான் என்று உணர்த்தினார்.

இந்தத் திருடன் முன்பே இரட்சிக்கப்பட்டு பின்னர் அவன் பின்வாங்கிபோனவனாக இருந்திருக்கலாம், அதன் காரணமாக இந்நிலையில் இயேசு அவனை மீட்டார் என்று நாம் அனுமானிக்கலாம். அந்தநாளில் ஒருவேளை அழுதுகொண்டிருந்த பெண்கள் சிலரைத் தவிரச் சிலுவையைச் சுற்றிலும் இருந்த மற்றவர்களைவிட அந்த மனிதன் அதிக விசுவாசத்தை வெளிப்படுத்தினான் (லூக். 23:27-31, 48, 49). இயேசுவின் வார்த்தைகளையும், இயேசுவைக்குறித்து அவன் கேள்விப்பட்டிருந்த அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டும் என்று அவன் நம்பினான். இயேசு ஒரு ராஜா, ஒரு ராஜ்யம் இருக்க வேண்டும் என்று அவன் விசுவாசித்தான்! அவன் இந்தச் சத்தியங்களை எவ்வாறு கற்றுக்கொண்டான்? அவன் இரட்சகரின் பிரசங்கத்தைக் கேட்டிருந்தானா? இஸ்ரவேலின் மேசியாவாக “வருகிறவர்” என்று யோவான்ஸ்நானகன் அவரைச் சுட்டியதை அவன் கேட்டிருந்தானா (யோவான் 1:29)? ஆம் என்ற பதில் சாத்தியமானது. இயேசுவை

மேசியாவாக அவன் ஏற்றுக்கொண்டிருந்தால், பிறகு தெளிவாக அவன் ரோமருக்கு எதிரான கலகத்தில் சம்பந்தப்பட்டவனாக இருக்கலாம். என்ன நடந்தது என்று நமக்குத் தெரியாது, ஆனால் அது உண்மையில் பிரச்சினை அல்ல. “இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?” என்பதுதான் முக்கியமான கேள்வி - “திருடன் என்ன செய்திருக்க வேண்டும்?” என்பதல்ல.

நாம் தேவனுடன் பேரம் பேச அல்லது அவருடைய உயிலில் காணப்படுகிற தேவைகளை மாற்ற (புதிய ஏற்பாடு) அதன் செய்தியை இலகுவாக்க அல்லது அதன் தரத்தை குறைக்க முடியாது. ஒன்று நாம் அவருடைய விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிய வேண்டும், அல்லது நாம் அவற்றை நிராகரிக்க வேண்டும். அவருடைய கட்டளைகளைப் புறக்கணிப்பதாக நினைத்துக்கொண்டாலும் அல்லது அவைகளைப் பின்பற்றாமல் இரட்சிப்பைக் கோரினாலும் அது மிக பெரிய தவறு.

## மேலும் ஆய்வுக்கு: “உடன்படிக்கை”

“உடன்படிக்கை” (διαθήκη, *டயதிகே*) என்பது எபிரெய நிருபத்தில் ஒரு முக்கியமான வார்த்தை ஆகும். கிரேக்க மொழியில் இந்த நிருபத்தில் இந்த வார்த்தை பதினேழு முறை காணப்படுகிறது.[68] இந்தச் சொற்கள் *டயதிமி* என்பதில் இருந்து வந்தது. *டைய* என்பது “இரண்டு,” என்றும் *டிதெமி* என்பது “வைக்க” என்றும் அர்த்தமாகும். இந்த வார்த்தையின் ஒருங்கிணைந்த அர்த்தம் “இரண்டுக்கும் இடையில் வைக்க” என்பதாகும்.[69] ஒரு கொல்லப்பட்ட விலங்கின் பாகங்களுக்கு இடையே உடன்படிக்கையை வைத்து இரத்தத்தால் முத்திரையிட்டு, உடன்படிக்கையைத் தகர்க்கும் ஒருவர் இதேபோல் வெட்டப்படுவார் என்று கூறுவது போல உள்ள பழைய ஏற்பாட்டு நடைமுறையை மனதில் நினைவுபடுத்துகிறது.[70] (ஆதி. 15:17; எரே. 34:18-ஐ பார்க்க.)

மற்றொரு கிரேக்க வார்த்தையான συνθήκη (*சுன்தெகே*), என்பது “உடன்படிக்கை” என்று மொழிபெயர்க்கப்படலாம், ஆனால் இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. பண்டைய கிரேக்க நூல்களில் இரண்டு மனிதர்களுக்கு இடையேயான உடன்படிக்கை வழக்கமாக *sunthēkē*, *சுன்தெகே* என்று குறிப்பிடப்படுகிறது. அத்தகைய உடன்பாடுகள் தேவனுடனான ஒரு உடன்படிக்கையாக ஒருபோதும் இருக்க முடியாது, இது இரண்டு சமமான கூட்டங்களுக்கு இடையேயானவை.

அதற்கு மாறாக, வேதாகமம் முழுவதும், ஆதியாகமம் 6:18-ல் தொடங்கி செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பாளர்கள் எபிரெயுவிற்கு *diathēkē*, *டயதிகே* בְּרִית (*b^e^rith*, *பெரித்,* “உடன்படிக்கை”) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். “ஒரு கூட்டத்தினர் முழு அதிகாரத்துடன் செய்த ஒரு உடன்படிக்கையை வேறு கூட்டத்தினர்

ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுக்கலாம், ஆனால் மாற்ற முடியாது" என்பதை இந்த வார்த்தை தெரிவிக்கிறது.[71] இந்த உபயோகத்தில் இந்த வார்த்தை கிட்டத்தட்ட "நியாயப்பிரமாணத்தை" ஒத்ததாக இருக்கிறது (உபா. 29:21, சங். 78:10, ஓசியா 8:1-ஐ பார்க்க). இந்த வகையான உடன்படிக்கை, தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேலுக்குக் கொடுத்த உடன்படிக்கை போல, ஒரு உயர்ந்தவரால் ஒரு தாழ்வானவரின் நலனுக்காகச் செய்யப்பட முடியும் (யாத். 24:6-8-ஐ பார்க்க). 8:8-12-ல் எபிரெய நிருபத்தை எழுதிய ஆசிரியர் மனதில் இருந்தது இதுவேயாகும்.

*டயதிகே* என்பது "உடன்படிக்கை," "மரண சாதனம்" அல்லது "உயில்" என்று மொழி பெயர்க்கப்படலாம். எபிரெயர் 9:16, 17-ல் KJV "மரண சாதனம்" என்றும் NIV "உயில்" என்றும் மெழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. "உயிலுக்கு ஏதோ ஒரு தனித்துவம் உள்ளது. ஒருவர் மரண சாதனத்தைக் கொண்டு பேரம் செய்ய முடியாது. அதைப் போலவே மனிதன் தேவனுடன் பேரம் செய்ய முடியாது. தேவன் விதிமுறைகளை வைக்கிறார்."[72]

ஒரு "உயில்" பயன் தருவதாக இருக்க, ஒரு மரணம் அவசியம். மரணம் தேவனுக்குப் பொருந்தாது என்பதால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில். "உடன்படிக்கை" என்ற வார்த்தை *diathēkē டயதிகே* என்பதன் சிறந்த மொழிபெயர்ப்பாக இருக்கலாம். எனினும், 9:16, 17-ல் இரண்டு கருத்துக்களும் காணப்படுகின்றன, ஏனென்றால் புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டது. நம்முடைய வாழ்வில் அவருடைய சித்தம் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பயன்பாடு

### மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் (9:1, 2)

யூத ஆசாரியர்கள் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் சன்னிதானத்தில் தேவசமுகத்தப்பங்களைச் சாப்பிட்டார்கள். கர்த்தருடைய நாளில் இதைத்தான் ஒவ்வொரு சபையும் செய்ய வேண்டுமா? ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும், முதல் நூற்றாண்டு சபை கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப் கடைபிடித்தது என்பது வேதவாக்கியங்களில் இருந்தும், இரண்டாம் நூற்றாண்டு வழக்கங்களில் இருந்தும் தெளிவாகிறது. "வாரத்தின் முதல் நாளிலே … அப்பம் பிட்கும்படி" அவர்கள் கூடி வந்தார்கள் (அப். 20:7). பவுல் எருசலேமுக்கு அவசரமாகத் திரும்பிவர இருந்தபோதிலும் துரோவாவில் இந்த வாய்ப்புக்காக ஏழு நாட்கள் காத்திருந்தான் (20:6, 16). எதற்காக அவன் ஏழு நாட்கள் காத்திருக்க வேண்டும்? அவர்களது

மன்னிப்புக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தின கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூர்வதற்காக, முதலாம் நாளிலே அவர்களின் வழக்கமான சபைகூடுதல் சபையின் வழக்கமாக இருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான் (மத். 26:28). இந்த ஆசரிப்பு கர்த்தரால் கட்டளையிடப்பட்டது (1 கொரி. 11:23-25). ஒற்றுமையின் அவசியம் முடிவடைந்து, அவர் மீண்டும் வருமளவும் சபையினர் கர்த்தரின் நினைவாக இராப்போஜனத்தைச் சாப்பிட வேண்டும் (11:26). கிறிஸ்தவத்தின் மிகப்பெரிய நாளில்-கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நாளில் அதைக் கடைப்பிடிப்பது இயல்புதான். கர்த்தருடைய இராப்போஜனம் அவரது பலி (கடந்த காலம்) மற்றும் அவருடைய இரண்டாம் வருகை (எதிர் காலம்) ஆகியவற்றின் ஒரு வழக்கமான நினைவூட்டலாக இருக்கிறது. நித்தியத்தைக் குறித்த விஷயங்களில் கவனம் செலுத்துவதில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இந்த உதவி தேவை.

1 கொரிந்தியர் 11:20-ல் பவுல் கூறினார், "நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது … இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே."[73] இந்தக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்திற்காக ஒன்றாகக் கூடுகிறார்கள், ஆனால் தங்கள் பிரிவுற்ற நிலையில் அதை ஒழுங்காக ஆசரிக்க இயலாதிருந்தது. கர்த்தருடைய இராப்போஜன நடைமுறை தொடர மற்றும் ஒழுங்காகச் செய்ய நாம் புதிய ஏற்பாட்டின் சபைகளை மீட்டெடுத்தால்,குறைவான முக்கியத்துவம் இப்போது நமக்கு இருக்கிறதா?

**பகிரங்கமாக மற்றும் திரைக்குப் பின்னால் (9:3)**

பிரதான ஆசாரியன் அவனுடைய வேலையை மூடுதிரைகள் மற்றும் புகையின் பின்னால் மறைந்திருந்து செய்தான். இயேசு தெளிவாகக் காணும்படி சிலுவையில் அறையப்பட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டு எல்லோரும் அதைப் புரிந்து கொள்ளும்படியாக மூன்று மொழிகளில் எழுதப்பட்டது. அவர் பகிரங்கமாகவே கேலி செய்யப்பட்டார். அதே போல் அவருக்கு நம்முடைய பதிலும் பகிரங்கமாகவே இருக்க வேண்டும் என்று இது குறிப்பிட முடியுமா? ஜேம்ஸ் டி. ட்ராப்பர், ஜூனியர், இவ்வாறு கூறுகிறார்:

> தேவனுக்கு நம்முடைய கடமைகளைப் பகிரங்கமாகச் செய்ய வேண்டும் என்பதற்கு இது ஒரு நினைவூட்டல் … ஞானஸ்நானத்தில் உள்ளவர்கள் தங்கள் இருதயங்களை இயேசு கிறிஸ்துவுக்கு அளித்ததாக மற்றவர்களுக்குப் பகிரங்கமாகக் கூறுகிற நமது சொந்த நாளின் முன்னறிவிப்பாக லேவி கோத்திர முறைமை இருந்தது.[74]

இயேசு பகிரங்கமாகப் பலியிடப்பட்டதால், அவரால்

இரட்சிக்கப்பட வேண்டும் என்று நமது விசுவாசத்தை நாம் பகிரங்கமாக அறிக்கை செய்ய வேண்டும் (1 தீமோ. 6:12-14; ரோமர் 10:9, 10).

**கற்பலகைகளும் மன்னாவும் (9:4)**

பத்துக் கட்டளைகளுடன் கற்பலகைகள், மன்னாவின் எஞ்சியுள்ளவற்றைக் கொண்டிருக்கும் கலசம் ஆகியவைகள் வனாந்தரத்தில் தமது ஜனங்கள் மீது தேவன் காட்டின அன்புக்கு அடையாளமாக இருக்கிறன. இப்போது நமக்கு அவருடைய அன்பு முந்தினதை காட்டிலும் மேலானதாக மற்றும் பழைய உடன்படிக்கையிலிருந்த எந்த ஒரு பொருளுக்கும் அப்பாற்பட்டதான கிறிஸ்துவின் மரணத்தை நாம் கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் மரணத்தினால், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (ரோமர் 5:11).

**கூடாரத்தின் விலக்கல் (9:6, 7)**

நிச்சயமாக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனிடம் நெருங்கி வர விருப்பம் கொண்டிருக்கிறான். அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று நமக்குத் தெரியாது, ஆனால் அனைத்துக் கட்டுப்பாடுகள் மற்றும் வரம்புகள் காரணமாக, பழைய உடன்படிக்கையின் கீழ் இது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருந்தது. தேவனுடன் நெருங்கிய உறவைப் பெறும் பாக்கியம் மிகவும் சிலரால் அனுபவிக்கப்பட்டது. ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும். மக்கள் அசுத்தமான, சபிக்கப்பட்ட பாவிகள் என்ற உண்மையை இது வலியுறுத்தியது. பிரதான ஆசாரியனும் பாவியாயிருந்தான். தனது பாவங்களை அகற்றும் வரையில் அவன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருடந்தோறும் பிரவேசிக்க முடியாது (அடையாளமாக). பாவ நிவாரண நாளிலும் கூட அவர்களுடைய பயங்கரமான பாவம் தேவனிடத்தில் இருந்து அவர்களைத் தொலைவில் விலக்கி வைத்தது என்பதை, பாவிகள் தேவனுடைய பிரசன்னத்தை நெருங்கி வர முடியாமை வலியுறுத்தியது.

நியாயப்பிரமாணத்தின் கீழ் முழு வழிபாடு முறைமையின் பற்றாக்குறையையும் இந்தச் சூழ்நிலை காட்டுகிறது. ஆசாரியர்களுக்கும் மற்ற வழிபாட்டாளர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் புதிய ஏற்பாட்டில் நீக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆணும் பொது வழிபாட்டை நடத்துவதில் பங்குகொள்ளத் தகுதியுடையவர்கள். அதே போல் பெண்கள் வழிபாட்டில் பங்குகொள்ளத் தகுதியுள்ளவர்கள் என்றாலும், தலைமைத்துவத்தில் இல்லை (1 தீமோ. 2:8-15-ஐ பார்க்க). சபை ஊழியத்தில் மூப்பர்கள், சபை ஊழியர்கள், மற்றும் சுவிசேஷகர்கள் போன்ற பல்வேறு

ஊழியர்களைக் கொண்டுள்ளது. ஆனால் இவர்களில் எவரும் நமக்கும் தேவனுக்கும் இடையில் செல்ல முடியாது. பிரசங்கிப்பதை அல்லது போதிப்பதை அத்தியாவசியப் பணியாகக் கொண்ட சிலர் முழுநேர சுவிசேஷகர்கள், ஆனால் இது மற்றவர்கள் பிரசங்கிப்பதையும் போதிப்பதையும் தடுப்பதல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை வழிபடலாம், பாடலாம், கொடுக்கலாம், மற்றும் வழிபாட்டில் கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்கு கொள்ளலாம்.

**பரிசுத்த ஸ்தலத்திற்கான வழி (9:8)**

வேதாகமத்தைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விரும்புவதாக மக்கள் அடிக்கடி கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட நூல்களை வாசிப்பது, ஆழமான வேதாகம வகுப்புகளில் கலந்துகொள்வது, அல்லது பிரசங்கங்களைக் கவனமாகக் கேட்பது இல்லை. கவனமாகக் கற்றல் என்ற கிரயத்தைச் செலுத்தாமலே தேவனை அறிந்துகொள்ளப் பலர் விரும்புகிறார்கள். "நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்" என்று இயேசு கூறினார் (லூக். 8:18). நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு செல்லப்பட்டு நம்முடைய சொந்தத் பலிகளைச் செய்யாமல் தேவனைச் சந்திக்க விரும்புகிறோம், ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்வதற்கு விடாமுயற்சியுடன் தன்னை உட்படுத்துகிறவர், அவர் ஏற்கெனவே தேவனைக் கண்டிருப்பதால் "தேவனைக் கண்டு கொள்ள எனக்கு உதவ முடியுமா?" என்று கேட்பதில்லை. அநேக வேதவாக்கியங்களை மனனம் செய்தவர்கள் எப்போதும் மிகவும் பக்தியுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள், ஆனால் கவனமாகப் படிக்காத அல்லது நன்கு கேட்காத ஒருவரைவிட, அவரது தற்போதைய சூழ்நிலைக்கும் அல்லது சோதனைக்கும் பொருந்தும் ஒரு சரியான வேத பகுதியைச் சிந்திக்கக்கூடிய ஒருவர் தேவனிடம் எவ்வாறு நெருங்கிச் செல்வது என்பதான மிக அதிகமான பிடிப்பைக் கொண்டுள்ளார் என்று நான் நம்புகிறேன். "நீங்கள் செய்தது போல், வேதாகமத்தைப் பற்றி அறிய என் வாழ்க்கையில் பாதியை நான் கொடுப்பேன்" என்று ஒரு பெண் ஒரு போதகரிடம் கூறினாள். "நல்லது சகோதரியே, அது என்ன கிரயமோ அதற்குச் சரியானது" என்று அவர் பதிலளித்தார். வேதவசனங்களைப் படிக்கக் கூடாத அளவு சுறுசுறுப்பாக இருக்க வேண்டியதில்லை. "வேத வசனத்தை நாங்கள் படிக்க வேண்டியதில்லை. எங்களுக்கு அது தெரியும்." என்று கூறிய ஒரு சபை மூப்பரால் இன்னும் மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒருவன் "படிக்க" வேண்டும் (KJV), அல்லது தன்னை "நிறுத்தும்படி" "ஜாக்கிரதையாயிரு" என்று 2 தீமோத்தேயு 2:15-ல் வாசிக்கிறோம். "சத்திய வார்த்தையை" ஒழுங்காகக் கையாளுவது எப்படி என்று

கற்றுக்கொள்வதற்கு ஜாக்கிரதை அவசியம். நாம் அனைத்தையும் ஒருபோதும் அறிய முடியாது, ஆனால் வார்த்தையை அதிகம் கற்பதன் மூலம், நாம் கிருபாசனத்தை நெருங்கி வர முடியும் (எபி. 4:15, 16).

தேவனுடனான நெருங்கிய உறவிற்கு உண்மையிலேயே நமக்குத் தேவைப்படுகிற அனைத்தும் கிறிஸ்துவுக்குள் வழங்கப்படுகிறது (மத். 6:33; பிலி. 4:10-14). நாம் ஆவியோடும் உண்மையோடும் தேவனை வணங்க வேண்டும். அப்பொழுது நாம் அவருடன் நெருக்கமாக வளர முடியும். "ஆவியோடும் உண்மையோடும்" மக்கள் தேவனை வணங்க வேண்டுமென அவர் விரும்புகிறார் என்று இயேசு சமாரியப் பெண்ணுக்கு அறிவித்தார் (யோவான் 4:23, 24). கிறிஸ்துவின் பலியை ஏற்றுக்கொள்வதே தேவனைக் கண்டுபிடிக்கும் வழி என்று எபிரெயர் நிருபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**பழைய ஏற்பாட்டுச் சின்னங்கள் (9:10)**

மாதிரிகள் மற்றும் மாதிரியல்லாதவைகளைக் குறித்த போதனைகள் ஒரு காலத்தில் அதிகமாகப் பிரசங்கிக்கப்பட்டதாக இருக்கிறது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டுடன் எவ்வாறு கலந்தவையாக இருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் பார்ப்பது ஒரு அற்புதமான விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் அனுபவமாக இருக்கலாம், ஆயினும் இரண்டும் ஒரே தேவனிடமிருந்தும், மற்றும் அதே ஆவியானவரின் மூலமாக வந்தன என்ற தெளிவான செய்தியை பறைசாற்றுகின்றன. இருப்பினும், பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அல்லது நியாயப்பிரமாணத்தின் கீழ் தேவனை வழிபடுகிற ஒவ்வொரு காரியத்திற்கும் உள்ள அர்த்தத்தைப் பற்றிய விசித்திரமான கருத்துக்களை நாம் கண்டுபிடிக்கக்கூடாது. இந்த ஆபத்து, பிலிப் எட்க்கும் பி ஹூக்ஸ் என்பவரால் நன்கு வெளிப்படுத்தப்பட்டது: "… மாதிரிகளின் முக்கியத்துவத்தைப் பார்ப்பது தவறானது அல்ல. ஆனால், சில வரம்புகள் அமைக்கப்பட வேண்டும், இல்லையெனில் ஒரு வளமான கற்பனைக்கு வழிவகுக்கலாம், மேலும் அடிக்கடி எல்லாவிதமான ஆடம்பரமான விளக்கங்களுக்கும் வழிவகுக்கும்."[75]

ஒரு தெளிவான ஆய்வுக்கான போதிய அறிவுரை வேதாகமத்தில் அளிக்கப்பட்டுள்ளது. ஏசாயா 7-ஆம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்ட ஒரு குழந்தையின் பிறப்பு, யூதாவின் விடுதலையைப் பரிந்துரைத்தது, மற்றும் கிறிஸ்துவின் கன்னி பிறப்பினை சுட்டிக்காட்டும் ஒரு உயரிய இரண்டாவது அர்த்தத்தைக் கொண்டதாய் இருந்தது (ஏசாயா 7:14; மத். 1:20-23). இயேசு ஒரு விடுவிப்பாளர் என்பதற்கு மோசே உதாரணமாய் இருந்தார் (அப். 7:37; உபா. 18:15-18). ஈசாக்கின் காணிக்கை, கிறிஸ்துவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் சுட்டிக்காட்டுவதாக உள்ளது என்று எபிரெயர்

நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (எபி. 11:17-19). புதிய ஏற்பாட்டில் நிறைவேறும்படியாக, ஒவ்வொரு விவரமும் ஒரே மாதிரியான வகையில் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறிப்பிடத்தக்க, ஒப்பிடக்கூடிய காரியங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இப்படி ஒரு எச்சரிக்கையைக் குறிப்பிட்ட போதும், ஒருவன் தொழுது கொள்வதற்குக் கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன், பலிபீடத்தின்மேல் பலியிடுதல் மற்றும் ஒருவன் சபையின் அங்கமாவதற்கு முன் மனந்திரும்புதல் ஆகியவற்றிற்கு இடையில், நாம் ஒரு கவர்ந்திழுக்கும் இணையைக் காண முடியும். ஆசாரியன் தொட்டியின் தண்ணீரில் கழுவுவது, புதிய ஏற்பாட்டின் ஆசாரியனாக ஒருவன் பெறும் தண்ணீர் ஞானஸ்நானத்தை மனக்கண் முன் கொண்டு வருகிறது. வாரந்தோறும் பரிசுத்த அப்பத்தைப் புசிப்பது, நமது கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரந்தோறும் நாம் அனுசரிப்பதைக் குறிப்பிடுகிறது, மேலும் வெளிப்புற பரிசுத்த ஸ்தலம் வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தல் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கு, சபைக்குள் பிரவேசித்தல் முன்தோற்றமாகத் இருக்கிறது. இவை அழகிய ஒப்புமைகளாகும்; கோட்பாடு மாதிரிகளாலும் ஒப்புமைகளாலும் விளக்கப்படலாம், ஆனால் அது அவற்றைச் சார்ந்து இருக்கக் கூடாது. புதிய ஏற்பாட்டின் எளிய பகுதிகளில் இருந்து நமது உபதேசத்தை நாம் எடுத்துக் கொண்டு கருத்துக்களை உதாரணப்படுத்துவதற்கு ஒப்புமைகளைப் பயன்படுத்துவோமாக.

## குடிப்பது பற்றிய கட்டுப்பாடு இல்லையா? (9:10)

நசரேயர்களின் நிலை தவிர (திராட்சை இரசம் குடிக்காதவர்கள்; எண். 6:2-21) பழைய உடன்படிக்கையின் கீழ் குடிப்பதின் மீது ஒழுங்குமுறைகள் இல்லை என்று சிலர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் உண்மை அல்ல. தூபகலசத்திலிருந்த தழலில் இருந்து அந்நிய அக்கினியைக் கொண்டு வந்ததன் மூலம் நாதாபும், அபியூவும் தேவனுடைய பிரமாணங்களை மீறிய உடன், திராட்சரசம் அல்லது வலுவான பானங்கள் குடிப்பது பற்றி ஒரு கட்டுப்பாடு வழங்கப்பட்டது (லேவி. 10:1-3), ஆசாரிப்புக் கூடாரத்திற்கு அருகில் வருகிறவர்கள் தேவனை கனம்பண்ண வேண்டும் மற்றும் அவரை பரிசுத்தராக கருதவேண்டும் என்று மோசே கூறினான் (10:3-7). நாதாபும் அபியூவும் அவர்களின் புத்தியீனத்தினால் கர்த்தரிடம் இருந்து வந்த நெருப்பால் எரிக்கப்பட்டார்கள், மேலும் இந்த இரண்டு குமாரர்களுக்காக ஆரோன் துக்கப்படக்கூடாதிருந்தது (லேவி. 10:1-7).

அடுத்து, தேவன் ஊழியம் செய்து கொண்டிருக்கும் ஆசாரியர்களைப் பற்றிய வெளிப்படையான ஒரு புதிய

கட்டுப்பாட்டைக் கொடுத்தார். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் நிர்வகிக்கப்பட்டிருக்கும் போது, “திராட்சை ரசம் அல்லது வலுவான பானம்” குடிக்கக் கூடாது (லேவி. 10:8-11). தொழுது கொள்ளுகையில் நாதாபும் அபியூவும் குடித்திருந்தார்கள் என்பது அங்கீகரிக்கப்பட்டிருந்திராத ஒரு செயலை அவர்கள் மிகவும் முட்டாள்தனமாக செய்தார்கள் என்பதை இது குறிக்கிறது. எந்த ஆசாரியனும் குடிபோதையில் ஊழியம் செய்யக் கூடாது என்ற பொது அறிவும் தேவனுக்கான பயபக்தியும் போதிக்கப்பட்டிருந்தது. தேவனுடைய கட்டுப்பாட்டை மீறியதற்காகக் குடிபோதை மன்னிக்கப்படவில்லை; அவர்கள் குற்றவாளிகளானார்கள்.

அதே கோட்பாடு இன்றும் பொருந்துகிறது. உதாரணத்திற்கு, ஒரு குடிகார ஓட்டுநர் ஒரு மோட்டார் வாகனம் மூலம் ஒருவனைக் கொல்லும் போது அவன் பொறுப்பேற்க வேண்டும். அவன் குடிப்பதற்கு முன்பு, என்ன நடக்குமென்று தெரிந்து கொள்வதற்கு போதுமான அறிவு அவருக்கு இருந்தது.

**கிறிஸ்துவின் மகத்தான நாள் (9:11, 12)**

அவருடைய மரணத்தின் போது, இயேசு தனது பிதாவின் அருகிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரிந்திருந்தார். இப்பொழுது, அவரது இரத்தத்தைச் சிந்தியதால் நமது மீட்பைப் பெற்று, அவர் பரலோகத்திற்கு மகிமையில் திரும்பிச் சென்றிருக்கலாம். தேவதூதர்கள் எவ்வளவு கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரித்திருக்க வேண்டும்! அவரது பூமிக்குரிய பணியைத் தொடர்ந்து கிறிஸ்துவின் மகிமைக்குத் திரும்புவது சங்கீதம் 24-ல் உதாரணப்படுத்தலாம்:

> வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்! யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்! யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா (வசனங்கள் 7-10).

இயேசு உண்மையானதும் மகிமையானதுமான பிதாவின் வாசஸ்தலமாகிய கூடாரத்தில் பிரவேசித்தார். வேதாகம விவரங்களை வைத்து, உண்மையான இரக்கம் வருகிற பிதாவின் கிருபாசனத்தில் இரத்தம் தெளிப்பதாக நாம் அவரைச் சித்தரிக்கலாம், “நான் அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” என்பது பிதாவின் பதில் (எரே. 31:34). கோவிலுக்கு வெளியே நின்றுகொண்டு மேலும் பிரதான ஆசாரியன் வெளியேறுவதற்காகக் காத்துக்கொண்டு இருப்பதைப் பரலோகத்தில் இந்தக் காட்சிக்கு ஒப்பிட முடியவில்லை!

**நாம் குற்றவுணர்வோடு இருக்க அவசியமில்லை (9:11, 12)**

நாம் இனிமேல் தேவனிடமிருந்து தூரத்தில் வைக்கப்படுவதில்லை, ஆனால் இப்பொழுது விசுவாசத்தில் அவர் அருகில் இருக்கிறோம். அவர் தூரத்திலிருக்கிறார் என்று கிறிஸ்தவர்கள் சிந்திக்கவோ (அப். 17:27, 28) அல்லது குற்றவுணர்வோடு வாழவோ வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் மீட்பின் இரத்தத்தால் நமது குற்றம் அகற்றிவிடப்பட்டது! நாம் மகிழ்ச்சியோடு பாட முடியும், என்றாலும், பவுலைப் போல, நாம் மனதுள் பாவிகளில் பிரதான பாவிகளாக நம்மைக் கருத்தில் கொள்வோம் (1 தீமோ. 1:15). கிறிஸ்துவின் பின் விளைவுகளுக்காகப் பவுல் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி வேலை செய்தான் (பிலி. 3:12-16). தமஸ்குவின் வீதியில் இயேசுவைப் பார்த்த பின்பு (அப். 9; 22; 26), அவனது வாழ்நாள் முழுவதும் முரண்பாடாக இருந்தது: அவன் ஒரு மன்னிக்கப்பட்ட, இரட்சிக்கப்பட்ட, மீட்கப்பட்ட பாவியாக இருந்தான். அவன் கடந்த காலத் தவறுகளை அடையாளம் கண்டு கொண்டான்; ஆனால் கிறிஸ்து அவன் சார்பாகச் செய்த கிரியையின் காரணமாக, கடந்த காலப் பாவங்கள் அவனை மனச்சோர்வுக்கு இழுத்துச் செல்ல அவன் அனுமதிக்கவில்லை (கலா. 2:20).

இந்த நன்மைகளை ஏற்றுக்கொள்வதற்கான தேர்வு நம்முடையது. யாரும் அதை நமக்காகச் செய்ய முடியாது. நாம் "யாராகிலும் வரலாம்" என்னும் குழுவில் இருக்கிறோம் (பார்க்க வெளி. 22:17). நாம் தேர்வு *செய்யலாம்.* நாம் விசுவாசிக்கும்போது, "தேவனுடைய பிள்ளைகளாகும்படி" அதிகாரம் கொடுக்கப்படுகிறது (யோவான் 1:11, 12). நம்முடைய இதயத்தில் விசுவாசம் காணப்படுகையில் நாம் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பது அல்ல, ஆனால் நாம் இரட்சிக்கப்படுவதற்கு நமக்குப் பாக்கியம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பேருந்தின் பயணச்சீட்டு வாங்குதல் ஒரு பயணியை வேறு நகரத்தில் சேர்ப்பதில்லை; ஆனால் அவன் அங்குச் செல்ல வழிவகுக்கிறது, ஏனென்றால் அந்தப் பேருந்தில் பயணம் செய்யும் உரிமை அவனுக்கு இருக்கிறது. அதே விதமாக விசுவாசமும் ஆவிக்குரிய பயணத்திற்கு வழிவகுக்கிறது. இந்த வாழ்வில் இருக்கும்போது நித்திய இரட்சிப்பின் இடத்திற்கு நாம் வரவில்லை; நாம் "அந்த நம்பிக்கையிலே" தொடர்ந்து இருக்கிறோம் (தீத்து 1:2). நமது நித்திய இலக்கைத் தேர்வு செய்வது நம்மைப் பொறுத்தது. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம், நாம் அவரிடம் சென்று, அவருடன் இருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது (எபி. 5:8, 9).

**இன்றைய மீட்பு என்பது என்ன? (9:12)**

"*மீட்பு*" என்பதற்கான λύτρωσις (*லுட்ரோஸிஸ்*) என்ற வார்த்தை,

அது பற்றி அடிமை சந்தை வாசனையைக் கொண்டுள்ளது, இது ஒரு சிறைப்பிடிக்கப்பட்ட அடிமையை விடுவிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. உலகின் பெரும்பாலான பகுதிகளில், கடந்த காலத்தில் அடிமை முறை நடைமுறையில் இருந்தது, ஆனால் அவைகளால் ஏற்படுத்தப்பட்ட பயங்கரத்தையும், அது உருவாக்கும் இழிவான விளைவுகளையும் நம்மால் ஒருபோதும் ஒழிக்க முடியாது.

"கிறிஸ்தவன்" என்ற பெயரை உடையவர்கள் இனவாதத்தின் எஞ்சியுள்ளவற்றை மேற்கொள்ள இராணுவ செயல்பாட்டினை கையில் எடுக்கக்கூடாது. மார்ட்டின் லூதர் கிங், ஜூனியர், அனைத்து இனத்தவர்களின் "சகோதரர்கள்" இடையே சமத்துவம் அடைவதில் அஹிம்சைக்கு ஆதரவளித்தார். இயேசு கிறிஸ்துவால் வழங்கப்படும் மீட்பு அனைத்து மக்களையும் விடுவிக்கிறது. . எல்லாவற்றிலும் நம் வாழ்க்கை முறைக்காக இயேசுவிடம் செல்ல வேண்டும். அவரது போதனை, மீட்பு மற்றும் சுதந்திரத்திற்கு வழிவகுக்கிறது.

"தமது சொந்த இரத்தத்தினாலே" கிறிஸ்து நமக்கு "நித்திய மீட்பைப் பெற்றுத் தந்திருக்கிற" படியினால் அனைத்து கிறிஸ்தவர்களும் சுதந்திரமாக உள்ளனர். அதற்குப் பதிலாக, நாம் தாழ்மையுள்ள ஊழியக்காரர்களாகவும் கிறிஸ்து இயேசுவுக்காகக் கட்டுண்டவர்களாகவும் வாழ்வதைத் தேர்வு செய்திருக்கிறோம் (எபே. 4:1-3-ஐ காண்க).

## "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (9:13-22)

இந்தப் பகுதியின் மையக் கருத்து மீட்பின் சுவிசேஷக் கதையாக இருக்கிறது. அதன் கருத்து தெளிவாக உள்ளது: இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது (வசனம் 22). இது எபிரெயர் மற்றும் முழு வேதாகமத்தின் பிரதான அம்சம் என்றும் கூட நாம் கூறலாம். நம்மை இரட்சிப்பது நம் சொந்த நற்குணம் அல்ல; இரட்சிப்பு என்பது இயேசுவின் இரத்தத்தால் பெறப்படுகிறது. "ஒரு மரணம் இடம்பெற்றுள்ளது என்பதால்" அந்த மீட்பு கிடைக்கும் என்று வசனம் 15 கூறுகிறது.

பழைய ஏற்பாடு "உயிர் இரத்தத்தில் இருக்கிறது" என்று போதிக்கிறது (லேவி. 17:11, 14). பத்தொன்பதாம் நூற்றாண்டில், "கெட்ட இரத்தம்" உடலில் இருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டும் என்ற யோசனையை மருத்துவர்கள் அகற்றினர். இது ஜார்ஜ் வாஷிங்டனின் மரணத்திற்கு ஓரளவு பொறுப்பு வகித்த ஒரு கருத்தாகும். மருத்துவ விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக, இரத்த வழிமாற்றங்கள் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

ராபர்ட் ஈ கோல்மேன் என்பவர் தனது *இரத்தத்தில் எழுதப்பட்டது* என்ற அவரது புத்தகத்தில் அதே அரிய இரத்த நோயைக் கொண்டிருந்த ஒரு சகோதரனையும் சகோதரியையும் பற்றிக் கூறினார். அந்தச்

சிறுவன் உடல் நலமடைந்தான், ஆனால் அவனுடைய சகோதரியால் நோயை மேற்கொள்ள முடியவில்லை. அண்ணனின் நோய்த்தடுப்பு இரத்தம் மட்டுமே அவனது சகோதரியைக் காப்பாற்ற முடியும் என்று மருத்துவர்கள் முடிவு செய்தனர். ஒரு மருத்துவர் அவனுடைய சகோதரி எவ்வளவாய்ச் சுகவீனமாக இருக்கிறாள் என்பதை விளக்கினார்; அவன் தனது இரத்தத்தைக் கொடுப்பதன் மூலம் அவளுடைய உயிரைக் காப்பாற்ற முடியும் என்று கூறினார். "உன்னுடைய இரத்தத்தைக் கொடுப்பாயா?" என்று அவர் கேட்டார், அந்தச் சிறுவனின் உதடு துடித்தது, ஆனால் அவன், "ஆம், நான் அதைச் செய்கிறேன்" என்று கூறினான். அவன் மற்றொரு அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரத்த வழி மாற்றம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு அதிசயம் ஏற்பட்டது போல அவனுடைய சகோதரியின் உடலில் உயிர் திரும்ப வந்தது. அதன் பிறகு மருத்துவர் விரைந்து வந்த உடன் அந்தச் சிறுவன், "டாக்டர், நான் எப்போது மரிக்கிறேன்," என்று கேட்டான்.[76] தனது இரத்தத்தைத் தனது சகோதரியிடம் கொடுத்ததால், தனது உயிரை இழக்க வேண்டும் என்று அவன் நினைத்தான் அவனது உதடு நடுங்கியதில் ஆச்சரியம் இல்லை!

இயேசு அதைச் செய்தார்; அவருடைய சரீரம் சிலுவையில் துடித்திருக்க வேண்டும் அவர் நமக்கு இரத்தம் கொடுப்பதில் மரித்துவிடுவார் என்று அவர் அறிந்திருந்தார். நாம் ஒரு நித்திய இரத்த மாற்றுதலைப் பெற்றுள்ளோம். கிறிஸ்தவர்கள் இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர்! இந்த அருமையான பரிசை நாம் ஒருபோதும் குறைவாக மதிப்பிடக்கூடாது (எபி. 10:29). என்ன ஒரு மேன்மையான கிரயத்தை அவர் செலுத்தியிருக்கிறார்!

**அவரது சொந்த இரத்தம் (9:22, 25)**

நமது இரட்சிப்புக்குத் தேவையானதாக இயேசுவின் இரத்தம் சிந்துதலுடன் சிலுவையின் செய்தியைக் கூறாத எந்தச் சபையோ அல்லது பிரசங்கியோ உகந்ததாக இருக்காது. "… எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று இரத்தத்தின் முக்கியத்துவம் 9:22-ல் காணப்படுகிறது. பிரதான ஆசாரியன் இரத்தத்தோடே பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தான் என்று வசனம் 25 நினைவூட்டுகிறது. பலருக்கு, இரத்தம் ஒரு பயங்கரமான எண்ணமாக இருக்கிறது. நமது சொந்த இரத்தத்தைக் காண்பது நம்மில் சிலருக்கு நடுக்கத்தையும் முக வெளுப்பையும் உண்டாக்குகிறது; மற்றொருவர் மரணத்தில் அவரது இரத்தத்தைச் சிந்துவதைக் காண்பது இதயத்தை உருக்குகிறது. பாவத்தை நமது தேவன் வெறுப்பதைவிட இரத்தம் இனிமேலும் நமக்கு வெறுப்பானதா? சிலுவையும் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமும், பாவம் தேவனுக்கு எவ்வளவு பயங்கரமானது என்று மெய்ப்பிக்கிறது.[77]

பாவம் மரணத்தை அழைக்கிறது, மேலும் உடல் அதன் இரத்தத்தை இழக்கும்பொழுது மரணம் ஏற்படுகிறது. நாம் நித்தியமாக நமது பாவங்களுக்காக மரிக்காததால், பாவமறியாதவராகிய கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்தது (2 கொரி. 5:18-21).

வேதாகமத்தில், உயிர் வன்முறையாக எடுக்கப்படுகிறதை இரத்தம் குறிக்கிறது. வழங்கப்பட்ட ஒரு இரத்த பலி அங்கிகரிக்கப்படும் பொழுது உயிரை எடுப்பதற்கான ஒரு வழியை உண்டாக்கலாம் மற்றும் உண்டாக்கியது, அதாவது இயேசு பாவம் இல்லாமல் இருந்தபோதிலும் அவருக்கு நடந்ததுபோல் (1 பேதுரு 1:18, 19; 2:21-23). ஒரு இரத்த பலி இலக்கியரீதியாக வேறொருவருக்கு உயிரைக் கொடுக்கிறது என்று புதிய ஏற்பாடு பரிந்துரைக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவின் மரணத்திற்கான மற்றும் அவருடைய இரத்தத்தின் பலிக்கான நன்மைகள் அவரது சரீர வாழ்க்கையின் முடிவுக்குக் காரணமாய் இருந்தது, ஆனால் அவருடைய பலி அனைத்து மனித இனத்திற்கும் ஆவிக்குரிய மீட்புக்கு வழிவகுத்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சில மதக் குழுக்கள், இயேசுவின் இரத்தத்திலான பாவநிவிர்த்திக்குரிய அனைத்து குறிப்புகளையும் அவர்களின் பாடல் புத்தகங்களில் இருந்து வெளியே எடுத்துவிடத் தீர்மானித்தன. இந்தக் குறிப்புகள், யாரும் எந்தக் காரணத்திற்காகவும் மரிக்க விரும்பாத அவைகளின் நவீன, கனிவான உறுப்பினர்களின் மனத்தை மிகவும் புண்படுத்துகிறதாகக் கருதினர். (சிலர் விலங்குகளின் உரிமைகள் மனிதர்களுக்குச் சமமாக இருப்பதாக வாதிட்டனர், எனவே அவைகள் மற்றொருவரின் நலனுக்காக மரிக்கக்கூடாது.) இரத்தம் சிந்துவது அவர்களுக்கு அருவருப்பானதாகக் காணப்பட்டது; அது அவர்களின் உணர்ச்சிகளின் கீழ் இருந்தது. இந்தக் குழுக்கள் நரகம், நியாத்தீர்ப்பு, பாவம் அனைத்தையும் பற்றிக் குறைவாகவே பிரசங்கித்தனர். பெரும்பாலான பிரசங்கிகள் நியாயத்தீர்ப்பு பற்றி இனிமேல் பேச மாட்டார்கள், “ஏனென்றால் அவர்கள் அதை நம்பவில்லை என்பதற்காக அல்ல, ஆனால் அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் அவ்வாறு செய்ய விரும்புவதில்லை என்பதால்” என்று ஒரு சமீபத்திய சுவிசேஷ இதழ் சுட்டிக்காட்டியது.[78] அதேபோல், மக்களை நாம் புண்படுத்துவோம் என்று நாம் பயப்படுகிறதால், பாவம் சபையில் கண்டிக்கப்படாமல் இருக்கலாம். பாவம் குற்றமாகும்! அதற்காக தேவனுடைய ஒரே குமாரனின் இரத்தம் கிரயம் செலுத்தப்படவேண்டியதிருந்தது!

நாம் பாவத்திற்கான மிகப்பெரிய பலியை - கிறிஸ்துவின் இரத்தத்தை விட்டுக்கொடுக்கும் போது - விரைவில் பாவத்திற்கான நமது போதனையை நாம் விட்டுக்கொடுக்கும் போது, மேலும் சபை விசுவாச துரோகத்திற்குள் செல்கிறது. பாவத்தைக் கண்டனம் செய்வதைத் தவிர்ப்பது கூடாது ஏனெனில் “நீங்கள் ஒரு

சட்டப்பூர்வமான சபை! நீங்கள் உறுப்பினர்களின் மிக உயர்ந்த தரநிலையைக் கோருகிறீர்கள். நீங்கள் பாவிகளை மன்னிக்கத் தவறியதால் நீங்கள் கிறிஸ்துவை ஒத்திருக்கவில்லை" என்று மக்கள் கூறுவார்கள். நாம் வேதாகமத்தின்படி இருக்க முயலவில்லை என்றால் பிரசங்கிப்பது எதற்காக? நாம் பாவத்திற்காக வருந்துபவர்களுக்கு நன்மை செய்து அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆனால் பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி கவனமாக இருக்க வேண்டும்.

### பாவத்தை எவ்வாறு விலக்குவது (9:26)

ஒரு நீதிமன்ற தீர்ப்பின் முழு மன்னிப்பு வழக்கப்பட்டதன் மூலம் பாவத்தை விலக்க முடிந்தது என்று எப்போதாவது ஒரு அரசாங்கமோ அல்லது எந்த நீதிபதியோ எந்தச் சட்டமே இயற்றப்பட்டதாகக் கேள்விப்படவில்ல. நீதிபதி நியாயப்படுத்தக்கூடிய கொலை என்று ஒரு வழக்கை முடிவு செய்யலாம், ஆனால் குற்றம் சாட்டப்பட்டவன் மற்றொருவன் கொல்லப்பட்டதற்காக இன்னும் குற்றவாளியாக உணரலாம். மனித மன்னிப்புக் குற்றத்தை மன்னிக்கவோ அல்லது நீக்கவோ முடியாது. மற்றவர்களின் செயல்களுக்காக எந்த ஒருவனது அறிக்கை பண்ணுதலும் உண்மையான மன்னிப்பு அல்லது குற்றத்தை நீக்குதல் ஆகியவற்றை வழங்க முடியாது. கொடூரமான பாவம் செய்தவர்களும் தங்களது குடும்பங்களை அழித்தவர்களும் அவர்கள் செய்திருக்கிற தீமைக்கான குற்ற உணர்வுகளை நீக்க முடியாது. தேவனால் மட்டும் ஒரு பாவியை மன்னித்து ஏற்றுக்கொள்ள முடியும், அவர் மனந்திரும்புதலை விரும்புகிறார் (லூக். 13:3, 5). அவர் வந்து "தம்மைத்தாமே பலியாக்கியதின் மூலம் பாவத்தை விலக்கிய" கிறிஸ்து மூலம் மன்னிக்கிறார். தேவனைத் தவிர்த்து நாம் ஒருபோதும் நமது குற்றத்தை நீக்க முடியாது. அவரிடம் மட்டுமே மன்னிப்பு உள்ளது. நாம் சுயமாக அதன் நினைவை அகற்ற முடியாது.

### இறுதி நியமனம் (9:27)

நாம் எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் நியமனம் மரணத்துடனான ஒன்று. "ஒரேதரம் மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." இந்த நியமனத்திலிருந்து தப்பிக்க முடியாது. சிலர் தங்களது வாழ்க்கை நன்றாக நடந்து கொண்டிருக்கும் போது இதை மறந்து விடுகிறதாகக் காணப்படுகின்றனர். இயேசு மிகவும் வளமாக இருந்த ஒரு மனிதனைப் பற்றிக் கூறினார். கர்த்தருக்காக இன்னும் எவ்வளவு அதிகம் கொடுக்க முடியும் என்று எண்ணுவதற்குப் பதிலாக, அவர் தனது சொந்த ஓய்வு விருந்தையும் அதன் பின் இருக்கும் ஓய்வு நேரத்தையும் மட்டுமே நினைத்தார். அவர் முதலீடு அல்லது திவால்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவர் செல்வந்தராக இருந்தார். அவர் தனக்குத் தானே நிதி

ஆலோசனை கொடுக்கப் போதுமான புத்திசாலியாக இருந்தார். ஒரு விவசாயியாக, அவருக்குத் தேவையான அவரது அனைத்து பொருட்களையும் சேமிக்கப் போதுமான அறை இருந்தது என்பதால் அவர் பல ஆண்டுகளாக அதில் உயிர்வாழ முடியும் என்று முடிவு செய்தார். எனினும், அவர் தவறுதலானார். தேவன் அவரிடம் "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த ராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்" என்று இயேசு கூறினார் (லூக். 12:15-21; முக்கியத்துவத்தை காண்க).

**ஒரேதரம் நியாயத்தீர்ப்பு (9:27, 28)**

ஏன் 9:27-ல் "எடுத்துக்கொள்ளப்படுதல்" க்கு நேரம் ஒதுக்கப்பட்டவில்லை? அத்தகைய நிகழ்வு இல்லை என்று அது அர்த்தமா? "எடுத்துக்கொள்ளப்படுதல்" ("ரப்ஷர்" என்பதற்கு அசல் லத்தீன் மொழியின் பொருள்) என்ற வார்த்தை 1 தெசலோனிக்கேயர் 4:17 ல் காணப்படுகிறது (வசனங்கள் 13-18-ஐ பார்க்க). பரிசுத்தவான்கள் "எடுத்துக்கொள்ளப்படுவார்கள்" அதனால் அவர்கள் "எப்பொழுதும் கர்த்தருடன் இருப்பார்கள்." மூன்றரை அல்லது ஏழு ஆண்டு ஒரு தற்காலிகக் காலமாக அங்குக் குறிப்பிடப்படவில்லை. இந்தப் பகுதியை வாசியுங்கள்! இது ஒரு "இரகசிய மற்றும் அமைதியான" நிகழ்வு அல்ல. இந்தப் பகுதியில் பிரிமில்லினியலிஸ்ட்களின் கருத்துக்கள் உண்மையில் நகைப்புக்குரியதாக இருக்கின்றன.

இயேசு நியாயத்தீர்ப்பிற்கு வருவார், மற்றொரு பலிக்காக அல்ல. அவர் மீண்டும் அதைச் செய்ய வேண்டும் என்றால், அது அவரது முதல் பலியைத் தகுதியற்றதாக நிரூபிக்கும் (வசனம் 27). அனைத்து மனிதர்களுக்கும் இறுதித் தீர்ப்பு இருக்கும் என்ற கருத்து பொதுவாக வெறுக்கப்படும் போதனையாக இருக்கிறது, ஆயினும் சில உண்மைகள் வேதாகமத்தில் இன்னும் தெளிவாகக் கூறப்படுகிறது (யோவான் 5:28, 29; 12:48; அப். 17:30, 31; 2 கொரி. 5:10; வெளி. 20:11-15). வர இருக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய பவுலின் பேச்சு பேலிக்ஸை அச்சுறுத்தியது (அப். 24:25). நாம் இந்த வாழ்க்கையில் அனுபவிக்கிற ஒரே ஒரு தீர்ப்புதான் என்று பேலிக்ஸ் நினைத்திருந்தால் அவன் மிகவும் அச்சுறுத்தப்பட்டிருப்பானா? உலகளாவிய இறுதி இரட்சிப்பை பவுல் போதித்திருந்தால், அவன் நடுங்கி இருப்பானா? அத்தகைய கருத்துக்களைப் பவுல் பிரசங்கிக்கவில்லை.

இயேசு கடைசி நாளில் திரும்பி வருவார் (யோவான் 6:39, 40, 44). அவர் மரித்தோரிலிருந்து நீதிமான்களை எழுப்பி, பூமியில் அவரது ஆரம்ப ஊழியம் சுட்டிக்காட்டிய (வசனம் 28) முழுமையான இரட்சிப்பைக் கொண்டு வருவார். கிறிஸ்தவர்கள் கடந்தகாலப் பாவங்களின் குற்றங்களிலிருந்து உடனடியாகச் சுத்திகரிக்கப்படும் வேளைக்கிடையில் (2 பேதுரு 1:9), "நித்திய ஜீவனின் நம்பிக்கையில்"

நாம் இருக்கிறோம் (தீத்து 1:2). ஒரு கருத்தில், கிறிஸ்துவில் இருப்பதன் மூலம் நாம் ஏற்கனவே விசுவாசத்தின் வழியாக அந்த வாழ்வைக் கொண்டிருக்கிறோம்; ஆனால் அந்த வாழ்க்கையின் முழு உண்மையும் அவரது இரண்டாம் வருகையில் நமக்கு வழங்கப்படும். நாம் உண்மையில் இப்போது, இந்த வாழ்க்கையில், இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், மேலும் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்வரை நித்திய ஜீவனைக் கொண்டிருக்கிறோம். யோவான் 3:16; 5:24-ஐ வாசிக்கவும், இங்கு நாம் "நம்பிக்கை வைத்து" நமது இரட்சிப்பைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது வினைச்சொல் காலத்தின் பொருள். ஒரு தொடர்ச்சியான உண்மைத்தன்மை நாம் விசுவாசத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நிலைத்திருப்போம் என்னும் உத்தரவாதத்தை அளிக்கிறது. இப்போது நமக்கு இரட்சிப்பு இருக்கிறது. யோவான் 3:16-ல் பயன்படுத்துகிற "கெட்டுப்போகாமல்" என்ற வார்த்தை ஒருவன் விசுவாசத்தைக் காத்துக்கொள்வது நித்திய ஜீவனை அடைவதற்கும் அவசியம் என்பதை குறிக்கிறது.

**இயேசுவுக்காக ஆவலோடு காத்திருத்தல் (9:28)**

நமது விசுவாசம் சரியாக இருந்தால், பின்பு நாம் நமது கர்த்தரின் இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்க்க வேண்டும். போதித்தல் இரண்டாம் வருகையை வலியுறுத்தி, அது நமக்குக் கொண்டுவரும் மகிழ்ச்சியைச் சித்தரிப்பதாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியோடு அந்தத் தருணத்தை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

வாழ்க்கையை அனுபவித்து வரும் இளம் வயதினருக்கு, அதன் துன்பம் காரணமாக இந்த உலகத்தை விட்டு வெளியேற விரும்பும் கற்பனையைச் செய்வது கடினம். உலக நிகழ்வுகள்-போர், நோய், பயங்கரவாதம், மற்றும் இயற்கை பேரழிவுகள்-நாம் வயதாகி வளர்ந்து, வாழ்க்கையில் அனுபவத்தைப் பெறும்போது, உண்மையில் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. எதிரிகள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள். தேவனுடைய விருப்பத்திற்குப் பதிலாகச் சாத்தானுடையதைப் பின்பற்றும் அநேகர், கிறிஸ்தவத்தை அழிக்க முயலுகிறார்கள். பொருளாதாரம், நம்முடைய சந்ததியின் ஆரோக்கியம், மகிழ்ச்சி, விசுவாசம்; வாழ்க்கையில் தனிப்பட்ட வெற்றி; மற்றும் பிற ஏராளமான அம்சங்கள் சம்பந்தமாக நிச்சயமற்ற நிலைகளை நாம் தொடர்ந்து சந்திக்கிறோம். இந்த விஷயங்கள் எதனாலும் நாம் கலங்கி இருக்கக் கூடாது ஏனென்றால் எல்லாவற்றையும் சரியானபடி செய்யக் கிறிஸ்து வருகிறார். நமக்குத் தீமை செய்தவர்களுக்கு எதிராக நாம் தனிப்பட்ட முறையில் பழிவாங்கவோ அல்லது பதிலடி கொடுக்கவோ அவசியம் இல்லை, ஏனென்றால் தேவன் நமக்காகப் பழிவாங்குகிறவர் (ரோமர் 12:18-21). பழிவாங்குதல் கர்த்தருடையது; அவர் அதைச் செய்யட்டும். பழிவாங்குதல் என்பது நாமே தீமையை எதிர் கொள்வதாகும்.

இயேசுவின் வருகையை ஆவலோடு எதிர்பார்ப்பது பூமியின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் மிகப் பெரிய பிரச்சனைக்கு தீர்வாக இருக்கிறது.

கிட்டதட்ட தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் கொண்டுள்ள பல இளைஞர்களை நாம் மறந்துவிடக் கூடாது ஏனென்றால் அவர்கள் தேவனுடைய அன்பைத் தங்கள் பெற்றோரிடம் காணவில்லை. வீட்டில் அதிக அன்பினால் திணற அடிக்கப்பட்ட பெரியவர்களான அவர்கள் வெறுமனே விட்டு விடப்பட்டதால் கஷ்டங்களை எதிர்கொள்ளுகின்றனர். ஒவ்வொரு சூழ்நிலையிலும் உள்ள மக்களுக்கு, அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால், இயேசு அவர்களை வெற்றி சிறக்கச் செய்வார் என்பதை நினைவூட்டுவது அவசியம் (ரோமர் 8:28, 31-39).

**இரண்டாவது வாய்ப்பு இல்லை (9:27, 28)**

9:27, 28-ல் மரணம் மற்றும் பின்னர் தீர்ப்பு பற்றிய அறிக்கை மரணத்திற்குப் பிறகு இரட்சிப்புக்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று வெளிப்படுத்துகிறது. சுத்திகரிப்பு, மறுபிறவி அல்லது இரண்டாவது வாய்ப்பு பற்றி வேதாகமம் எங்கும் எதையும் கற்றுத் தரவில்லை. ஒரு மனிதனின் மரணம் ஒரு தெய்வீக அழைப்பாகும், ஆனால் ஒருமுறை நிகழ்கிறது. அனைத்து மக்களும் மரிப்பார்கள் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது (இரண்டாம் வருகையில் உயிரோடு இருப்பவர்கள் தவிர), ஆனால் நியாயத்தீர்ப்பை அனைவரும் எதிர்கொள்ள வேண்டும் என்பது நிச்சயமான ஒன்று.

---

இறுதிக் குறிப்புகள்

[1]Adapted from Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* (Grand Rapids, Mich.: Baker Books, 2002), 114. [2]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 309. [3]Lightfoot, *Everyone's Guide to Hebrews*, 115. [4]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 249. ஒரு புதிய திரை அல்லது திரைச்சீலை, ஆண்டுதோறும் மாற்றப்படும், எனவே அது தானாகவே கிழிந்திருக்கச் சாத்தியம் இல்லை. (Milligan, 312.) பூகம்பத்தில் கூட, திரை மேலிருந்து கீழாகக் கிழிவதைவிடக் கொடி போல அசைந்தாடுவதற்குதான் வாய்ப்பு அதிகம். [5]இந்த வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லை, ஆனால் இந்தக் கருத்து ஏசாயா 60:2; மத்தேயு 17:5; லூக்கா 2:9; ரோமர் 9:4-ல் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டு, Targums-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. [6]"உடன்படிக்கையின் கற்பலகைகள்" (வசனம் 4) என்ற வெளிப்பாடு "உடன்படிக்கை" என்பதை அடையாளம் காட்டுவதாயும், நிச்சயமாகப் பத்து கட்டளைகளை உள்ளடக்கியதாயும் உள்ளது. NIV -யானது "பிராயச்சித்தஞ்செய்தலின் மூடி" என்று கூறுகிறது (9:5). [7]மன்னா வைக்கப்பட்ட பாத்திரமும், மற்றும் ஆரோனுடைய தளிர்த்த கோலும் உடன்படிக்கைப் பெட்டியில் இருந்ததாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. இது செப்துவஜிந்த்-ல் கூறப்பட்டிருந்தாலும், எபிரெய பழைய ஏற்பாட்டில் பாத்திரமானது (கலசம்) தங்கத்தால் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. அந்த மொழிபெயர்ப்பானது சரியானதாக இருக்கலாம், அல்லது

தேவன் இந்தத் தகவலை எபிரெயர் நிருபத்தின் ஆசிரியருக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். [8]Josephus *Wars* 1.7.6; *Antiquities* 14.4.4; Tacitus *History* 9. [9]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 188, n. 29. இந்தக் கல் *மிஷ்னா யோமா* 3.5.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. [10]யாத். 25:18-22; 29:43; எண். 7:89; எசே. 10:19, 20.

[11]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 153. [12]வாசஸ்தலத்திற்குள் பிரவேசிப்பது என்ற மூல வாக்கியம் கருத்தில் உள்ளது என்பது சத்தியமாய் இருக்கிறது, ஆனால் ஆலயத்தின் தூய்மையின் அடையாளமாக, தேவனின் திட்டத்தைப் பின்பற்றும் வழிபாட்டு முறையுடன் ஆசாரிப்புக்கூடாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. 9:6, 7-ல் உள்ள இக்காலத்திற்கு என்பதை வெறுமனே நீக்கிவிட முடியாது, ஏனென்றால் எபிரெயர் எழுதப்பட்ட சமயத்தில் இது ஒரு நடப்பு நடவடிக்கையாக இருந்தது. [13]ஹரத் எல். ரீஸ் அன்றைய தினத்தில் பிரதான ஆசாரியனுடைய கடமைகளை அவனுடைய ஆடைகளிலிருந்து காணிக்கைகள் வரைக்கும், இரத்தத்தைத் தெளித்தல், தூபவர்க்கத்தை எரித்தல் மற்றும் போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடா ஆகியவைகளைக் குறித்து ஒரு நல்ல, சுருக்கமான திரட்டாகத் தந்துள்ளார் (லேவி. 16). (Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* [Moberly, Mo.: Scripture Exposition Books, 1992], 147-48.) எண்ணாகமம் 15:27-31 ஆனது, துணிகரமான பாவி ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகும்போது, அறியாமையில் செய்த பாவங்களுக்கு (தற்செயலாக) மன்னிப்பு பெற முடியும் என்று காட்டுகிறது. பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளில் ஒரு தடவைக்கு மேல் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்திருக்கலாம் என்றும்கூட ரீஸ் யோசனை தெரிவித்துள்ளார். (Ibid., 148, n. 40.) [14]*Mishnah Yoma* 8.9. [15]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 95. [16]"அடையாளம்" என்ற வார்த்தை *பரபோலே* (παραβολή) என்பதாய் இருக்கிறது, அது ஆங்கிலத்தில் "உவமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "ஒப்பிடுதலுக்காக ஏதோ இணைந்து தூக்கி எறியப்பட்டது" என்று அது கூறுகிறது, ஆனால் அது எந்த வகையான குறியீட்டு பாவனையையும் குறிப்பதாக இருக்கலாம். ஒரு வகையில் மரித்தோரிலிருந்து ஆபிரகாம் ஈசாக்கை மாதிரியாக திரும்பவும் பெற்றுக்கொண்டதைப்போல 11:19 இல் அது பயன்படுத்தப்பட்டுள்ளது. (Wuest, 155.) [17]Ibid. [18]Bruce, *Hebrews*, 196. [19]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 154. [20]Wuest, 156.

[21]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 325. [22]Lightfoot, *Everyone's Guide to Hebrews*, 118. [23]Kistemaker, 248. F. F. Bruce agreed that this is for the present. (Bruce, *Hebrews*, 327.) "ஏற்கனவே இங்கே" (NIV) என்பது பொதுவாகச் சிறந்த மொழிபெயர்ப்பாக அங்கீகரிக்கப்படுகிறது. [24]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 256. [25]இங்கே உள்ள "கைவேலையல்லாத" (ἀχειροποίητος, *அச்சைரோபோய்டோஸ்*) என்ற வார்த்தை 2 கொரிந்தியர் 5:1-ல் பவுலினாலும் பயன்படுத்தப்பட்டதாய் இருந்தது, மற்றும் இங்கே ஒரு எதிர்மறையான முன்னுரைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மாற்கு 14:58, அப்போஸ்தலர் 17:24, எபிரெயர் 9:24, மற்றும் கொலோசெயர் 2:11 ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு கூட்டு வார்த்தை, ஒரு பகுதியாக "செய்ய" என்பதிலிருந்து வந்ததாக இருக்கிறது. சாலொமோன் மக்களுடைய தலைவர்களிடம் தன்னுடைய ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் பேசியபோது, புதிய ஆலயத்தில் தேவன் வாசம்பண்ணமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளான் (2 நாளா. 6:18). [26]அவர் உண்மையில் அவரது இரத்தத்தைப் பரலோகத்திற்கு எடுத்துச் சென்றதாக இது பரிந்துரைக்காது. (Bruce, *Hebrews*, 200.) உலகப்பார்வையில், அவரது இரத்தம் தரையில் துளித்துளியாக விழுந்தது. எனினும், அவர் தனது உயிரைக் கொடுக்க ஆயத்தமாக இருந்ததால், அவரது காணிக்கை பரலோகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (Wuest, 158-59.) [27]இந்த நிகழ்ச்சியானது, தொழுதுகொள்ளுகிறவன் தனது பாவத்தைப் பற்றிச் சிந்திக்கவும்,

ஆத்தும சுத்திகரிப்பு தேவை என்பதைக் கண்டுகொள்ளவும், மற்றும் அதற்குத் தேவன் அனுக்கிரகம் செய்வார் என்பதையும் புரிந்துகொள்ளவும் வழிவகுக்கிறது. (Reese, 153.) [28]பழைய ஏற்பாட்டில் "தெளித்தல்" எப்பொழுதும் இரத்தத்தினாலேயே செய்யப்பட்டது, தண்ணீரினால் அல்ல, மற்றும் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்துடன் எந்தச் சம்பந்தமும் இல்லை. [29]மில்லிகன் இந்த வார்த்தையை "கிறிஸ்துவின் தெய்வீக இயல்பு" (Milligan, 325-27) என்று குறிப்பிட்டுள்ளார். இதே போன்ற நோக்கங்கள் Westcott, 261, மற்றும் Hughes, 358-59 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. [30]Lightfoot, *Jesus Christ Today*, 172.

[31]Bruce, *Hebrews*, 205. [32]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 189. [33]13:18 இல், ஒரு நல்மனச்சாட்சி மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் நிருபத்தின் அசிரியர் தனக்காகவும், மற்றும் அவனுடைய சக ஊழியர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படியாக வேண்டியிருக்கிறான். ஞானஸ்நானத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படிவதன் மூலம் நல்மனச்சாட்சி பெறப்படுமென 1 பேதுரு 3:21 காட்டுகிறது. [34]Adapted from Hughes, 360-61. [35]Gerald F. Hawthorne, "Hebrews," in *The New International Bible Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986), 1522. [36]Hughes, 365. [37]Wuest, 163. [38]"புதிய உடன்படிக்கையில் இயேசுவின் பாத்திரம் மட்டுமே நடைமுறையில் இருந்துள்ளது (9:15 மற்றும் 12:24 லும் கூட). அதே முறையில், 1 தீமோத்தேயு 2:5-ல், பவுல் அவரைப்பற்றி இதைப் பயன்படுத்தியுள்ளான்" (Jim Girdwood and Peter Verkruyse, *Hebrews*, The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1997], 269). [39]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 183. [40]Lightfoot, *Jesus Christ Today*, 181.

[41]1:2, 4, 14; 6:12, 17; 9:15; 11:7, 8; 12:17 பார்க்கவும். [42]அப்போஸ்தலர் 20:32 (எபேசுவின் மூப்பர்களிடம் பேசுதல்); கலா. 3:18; எபே. 1:14, 18; 5:5; கொலோ. 3:24 பார்க்கவும். [43]Girdwood and Verkruyse, 298. [44]16 வது வசனத்தில் "மரணத்தை நிரூபிக்க வேண்டியது அவசியமாக உள்ளது" என்ற முழுமையான மொழிபெயர்ப்பை NIV கொண்டுள்ளது. [45]இயேசு "உயில் ஐயத்திற்கு இடமற்றது என நிரூபிக்கப்பட்டது," என்ற ஒரு கருத்தில், அல்லது நடைமுறையில், அவரது சொந்த விருப்பத்திற்குச் செயல்படுகிற விதமாக, அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் பெற்றிருப்பதாகவும், அதன் நிலைமைகளை இன்னும் விளக்கிக் கூறியுள்ளார் (மத். 28:18-20). [46]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 128. [47]"திறந்து வைக்கப்பட்டது" (ἐγκαινίζω, *எக்கைனிஜோ*) என்பது, "அர்ப்பணிப்பு" (ASV; NKJV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அல்லது "நடைமுறைப்படுத்துவதற்கு" (NIV) என்பது "ஒப்புதல் அளிக்கப்பட்டது" அல்லது "புதுப்பிக்கப்பட்டது" என்பதாகப் பொருள்படலாம். இது "புதிதும் ஜீவனுமான ஒரு மார்க்கம்" என்பதாக மீண்டும் 10:20 இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (Guthrie, 192-93.) [48]Hughes, 374. [49]கர்த்தருடைய இராப்போஜனமானது, சில மதக் குழுக்களுக்கு "நன்றி செலுத்துவதற்கு" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து "நற்கருணை" என அறியப்படுகிறது. இந்த வார்த்தை, புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய இராப்போஜனத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் இயேசு போஜனம் தொடங்குவதற்கு நன்றி தெரிவித்தார். [50]Bruce, *Hebrews*, 215. ஆரோனுக்குத் தெளிக்கப்படுவதைக் குறித்த அறிவுறுத்தல் யாத்திராகமம் 40:12-16-ல் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் இரத்தம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. எபிரெயரில் கொடுக்கப்பட்ட அதே உண்மைகள் ஜோசபஸ் தொல்பொருட்கள் 3.8.6 ல் காணப்படுகின்றன. பல பண்டைய கையெழுத்துப்பிரதிகள் "வெள்ளாட்டுக்கடா" பற்றி (Hughes, 375) குறிப்பிடவில்லை என்றாலும், எபிரெயர் 9:13 இன் பெரும்பாலான பதிப்புகளில் "வெள்ளாட்டுக்கடா" குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், பாவநிவாரணப் பலிக்காக வெள்ளாட்டுக்கடாக்கள் பயன்படுத்தப்பட்டன (லேவி. 1:10). (Guthrie, 193.)

[51]Josephus *Antiquities* 3.8.6; 4.4.6. [52]ஆசரிப்புக் கூடாரமானது இரத்தம், மற்றும் எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு தெளிக்கப்பட்டது என்பதாக ஜோசபஸ்

கூறியுள்ளான். (Ibid., 3.8.6.) [53]Stedman, 101, n. [54]Hughes, 378. [55]Milligan, 335. [56]"அது [தேவ ஜனங்கள்] உள்ளான சுத்திகரிப்பு தேவை என்பதாய் இருக்கிறது, … அவர்கள் அவருக்கான பொருத்தமான ஒரு வாசஸ்தலமாக இருக்கலாம்" (Bruce, 219). [57]Ibid., n. 152. [58]Wuest, 168. [59]1:4; 6:9; 7:7, 19, 22; 8:6; 9:23; 10:34; 11:16, 35, 40; 12:24 பார்க்கவும். [60]Bauer, 75.

[61]Reese, 163, n. 103. [62]Hughes, 383, n. 37., எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட சமயத்தில், ஆலயத்தில் வழிபாடு எவவாறு நடந்து கொண்டிருந்தது என்பதைக் குறிக்கும் நிகழ்கால வசனங்கள் அனைத்தையும் ஹுயூஸ் பட்டியலிட்டுள்ளார். (Hughes, 31-32.) [63]Bruce, Hebrews, 221. [64]Ibid., 222. [65]Girdwood and Verkruyse, 305. [66]இந்த வெளிப்பாடு, 1 கொரி. 1:7; பிலி. 3:20; மற்றும் ரோமர் 8:19, 23, 25 போன்ற வேறு இடங்களில் காணப்படுகிறது. [67]அப். 2:36-41; 8:12, 13, 34-39; 10:46-48; 16:15, 27-34; 18:8; 19:1-6; 22:16 வாசிக்கவும்; 1 கொரி. 1:14 ஐயும் பார்க்க. [68]பார்க்க 7:22; 8:6, 8, 9 (இருமுறை), 10; 9:4 (இரு முறை), 15 (இருமுறை), 16, 17, 20; 10:16, 29; 12:24; 13:20. [69]Wuest, 163. [70]Owen D. Olbricht, "An Introduction," in "The Covenants," *Truth for Today* (October 2000): 3-ல் உடன்படிக்கை செய்வதற்கான கூடுதல் விவரங்கள்.

[71]Wuest, 164. [72]Leon Morris, "Hebrews," in *The Expositor's Bible Commentary*, ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1981), 12:70. [73]கிரேக்க வார்த்தையான (κυριακός, *கொரியகோஸ்*) புதிய ஏற்பாட்டில் இரண்டு முறையும், அதில் ஒருமுறை "கர்த்தருடைய இராப்போஜனம்" (1 கொரி. 11:20) என்பதற்கும் மற்றும் "கர்த்தருடைய நாள்" (வெளி. 1:10) என்பதற்கு ஒருமுறையும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. "கர்த்தருடைய இராப்போஜனம்" மற்றும் "கர்த்தருடைய நாள்" ஆகியவை ஒன்றாக உள்ளன என்று எவரெட் பெர்குசன் முடித்துள்ளார். (Everett Ferguson, *The Church of Christ: A Biblical Ecclesiology for Today* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996], 242.) [74]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 228. [75]Hughes, 317. [76]Robert E. Coleman, *Written in Blood: A Devotional Study of the Blood of Christ* (Old Tappan, N.J.: Fleming H. Revell Co., 1972), 32-33. [77]"இயேசுவின் இரத்தத்துடன் சம்பந்தப்படுத்தி, "சிந்திவிட்டது" என்ற வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது. அது ஒரு விபத்தைக் குறிக்கிறது, மற்றும் அவரது இரத்தம் தற்செயலாகச் சிந்தப்படவில்லை" என்று பிஃரீட்-ஹார்டீமன் கல்லூரியின் (இப்போது பல்கலைக்கழகம்) தலைவர் காலஞ்சென்ற ஹெச். ஏ. டிக்சன் கூறியுள்ளார். அவர் மரிப்பதை தேர்வு செய்துள்ளார்! [78]Tim Stafford, "The Church's Walking Wounded; How Should We Respond in a Psychological Age?" *Christianity Today* (March 2003): 68.